
# ரமணோதயம்

ஜனவரி 2020
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20





**ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக்
கொள்கிறோம்

உதயம் 19 ஓம் நமோ பகவதே ஶ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2020

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஶ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஶ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2020


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | | 16 |
| 3 | பகவான் புத்தரும் ரமணரும் சந்திக்கும் சிறப்பு | சு. பரமேஸ்வரன் | 17 |
| 4 | அக்ஷரமணமாலை ஒரு தத்துவக் கருவூலம் | டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன் | 25 |
| 5 | எதையும் வீணாக்காதே | | 37 |
| 6 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 40 |
| 7 | பக்தி தந்த பரிசு | சரஸா ரங்கநாதன் | 44 |
| 8 | ஔவைக்குறள் | ராம் மோஹன் | 48 |
| 9 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 52 |
| 10 | சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர் | வி. நிரஞ்சன் | 58 |
| 11 | ரமண மையங்களை நோக்கி தொடர் கட்டுரை | | 65 |
| 12 | அருணை ஜோதி | ராம் மோஹன் | 72 |
| 13 | செய்திகள் | | 74 |


பின் அட்டை: ஜாம்நகர் குஜராத்தில் புதியதாக முழுவதும் சலவைக் கற்களால் எழுப்பப்பட்ட பகவான் ரமணரின் ஆலய சந்நிதி.

## *ஆசிரியர் உரை*

# அனைத்துக்குமே விடையான அவதாரம்

*ஆன்மிக வாழ்க்கைக்கான ஐந்து படிகளை முண்டக உபநிஷத் மந்திரம் கூறுகிறது.*

*பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்$^{3}$ராஹ்மணோ*
*நிர்வேத மாயாத் நாஸ்த்யக்ருத: க்ருதேன ।*
*தத்$^{3}$விக்ஞானார்த$^{2}$ம் ஸ கு$^{3}$ருமேவாபி$^{4}$ க$^{3}$ச்சே$^{2}$த்*
*ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்$^{3}$ரஹ்ம நிஷ்ட$^{2}$ம் ॥*

*— (முண்டக உபநிஷத், 12)*

*சாதகன் ஒருவன் தன் செயல்களால் தான் அடையும் உலக அனுபவங்களை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் விளைவாக "பலனில் பற்றுடன் செய்யப்படும் கர்மங்களால் ஆத்ம சாட்சாத்காரம் அடைய முடியாது" பற்றற்ற செயல் புரிவதின் மூலமே அடைய முடியும் என்பதை உணர்ந்து, பற்றின்மை பெற வேண்டும். பூர்ண ஞானம் பெற்று இறைத் தன்மையில் நிலைபெற்ற ஸத்குருவை கரத்தில் ஸமித்துடன் சரண் அடையவேண்டும்.*

*இந்த ஆன்மிக வாழ்க்கைக்கான ஐந்து தேவைகள் இங்கே முண்டக உபநிஷத்தின் ரிஷி கூறுகின்றார், அவையாவன: தூய வாழ்க்கை, விசாரம் செய்தல், பற்றின்மை, தெளிவான குறிக்கோளில் திடமான சார்பு, ஸத்குருவிடம் பூர்ண சரணாகதி.*

முண்டக உபநிஷத்தில் இரண்டாவது அதிகாரத்திலேயே இறைவனை அடைதல் என்னும் குறிக்கோளில் திடமான சார்பு பற்றி ரிஷி கூறுகிறார்.

*யஸ்மின் த்³யௌ: ப்ருத்²வீ சாந்தரிக்ஷமோதம்*
*மன: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்வை:*
*தமேவைகம் ஜானத² ஆத்மானம் அன்யா வாசோ*
*விமுஞ்சத² அம்ருதஸ்யைஷ ஸேது:*

— *(முண்டக உபநிஷத் 2.2.5)*

பொருள்: வானகம், பூமி, ப்ரபஞ்ச சூழல், மனம், பிராணம், புலன்கள் அனைத்தும் யாரிடம் நிலை பெற்றுள்ளனவோ அந்த ஒரே பரமாத்மாவை அறியுங்கள். தேவையற்ற மற்ற பேச்சுக்களை விடுங்கள். மரணமில்லாப் பெருவாழ்விற்கான பாலம் இது ஒன்றே.

"*அன்யா வாசோ விமுஞ்சத²*"

தேவையற்ற மற்ற பேச்சுக்களை விடுங்கள் என்று அதிரடியாக அறிவுறுத்துகிறார் ரிஷி. உண்மையில் ஆன்மாவை அறிய முதல்படியே தேவையற்ற பேச்சுக்களை விடல் ஆகும். நம் ஆற்றலின் பெரும்பகுதி பேச்சிலேயே செலவு ஆகின்றதல்லவா!

"*யோக³ஸ்ய ப்ரத²ம த்³வாரம் வாக் நிரோத⁴:*"

பேச்சுக் கட்டுப்பாடே ஆன்மிக வாழ்விற்கு முதல்படி என சங்கரர் விவேகசூடாமணி 367ஆவது சுலோகத்தில் கூறுகிறார்.

இந்த இறை உணர்வு முன் பின், வலது இடது, கீழ் மேல் என்று பிரபஞ்சம் முழுதுமே இறைவன் நிறைந்துள்ளான் என்ற உபநிஷத் கருத்தினை,

"*வெளிவளி தீநீர் மண்பல உயிரா*
*விரிவுறு பூத பௌ திகங்கள்*
*வெளிஒளி உன்னை அன்றுஇன்று எண்ணின்*
*வேறுயான் ஆர்உளன்?*

— *(அருணாசல பதிகம், 7)*

எனப் பகவான் பரமாத்மாவின் ஸர்வ வியாபகத் தன்மையைக் கூறுகிறார்.

இந்தப் ப்ரபஞ்சம் அனைத்துமே இறைவனி டத்திலேயே தோன்றி அவனிடத்திலேயே நின்று விளங்கி, அவனிடத்திலேயே ஒன்றுகிறது. ஆத்ம ஞானியின் பார்வையில் அனைத்துமே ப்ரமமாகத் தோன்றுகிறது. அதே பரம்பொருள் நம் இதயத்தே 'நான்' என்னும் உள்ளுணர்வாக சதா நடம் புரிகின்றது.

சித்திரமாம் இஃதெல்லாம் செம்மலையே நின்பாலே
உத்திதமாய் நின்றே ஒடுங்கிடுமால் - நித்தியமும்
நானென்று இதயம் நடித்திடுவையால் உன்பேர்
தான்இதயம் என்றிடுவர் தாம்.

— (அருணாசல பஞ்சரத்னம், 2)

என்று பகவான் விளக்குகிறார்.

பகவான் உள்ளது நாற்பது நூலில், 'சித்சடக் கிரந்தி', 'சித்' ஆன பேரறிவையும், ஜடமான உலக-உடல் பொருளையும் ஒன்றாகக் கட்டிப்போடும் மாயை முடிச்சை 'சித்ஜடக் கிரந்தி' என்று கூறுகிறார்.

இந்த முடிச்சை எங்ஙனம் அழிப்பது?

ஆன்ம விசாரத்தின் மூலமே இந்தக் கட்டை அவிழ்க்க இயலும் என்கிறார். இந்தக் கருத்தை உபநிஷத் ரிஷியும் தெளிவாகக் கூறுகிறார்.

பி$^{4}$த்$^{4}$யதே ஹ்ருத$^{3}$யக்$^{3}$ரந்தி$^{2}$
சி$^{2}$த்$^{4}$யந்தே ஸர்வஸம்ஶய: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி
தஸ்மின் த்$^{3}$ருஷ்டே பராவரே ॥ (மு.உ. 2.2.8)

பொருள்: உயர்ந்தது தாழ்ந்தது என்று அனைத்துமாய், விளங்குகிற ஆத்மாவை ஆன்ம விசாரம் செய்து அறிந்தால் மனக் குழப்பங்கள் அகலுகின்றன. ஐயங்கள் அனைத்தும் விலகுகின்றன. வினைத் தொடர்புகள் அனைத்துமே அழிகின்றன. வினைத் தொடர்பே அற்றவர் பகவான்.

பகவானைப் பற்றிக் கூறும்போது, ஸ்வாமி சித்ரூபானந்தர் மிக வியந்து கூறுவார்: “உண்ண உணவும் பருக நீருமின்றி த்யானம் செய்த பல ரிஷிகளைப் பற்றியும் முனிவர்களைப் பற்றியும் கேள்விப் பட்டு இருக்கிறோம். ஆனால் பகவானைப் பார்க்கும்வரை அவர்கள் இதிஹாசத்தில் வரும் கற்பனைப் பாத்திரங்கள் ஆகவே தெரிந்தனர். வருடக்கணக்கில் ஒரு குகையில் அமர்ந்திருப்பதாவது! அதிலும் யாரிடமும் பேசாமலும் எப்படி அமர்ந்திருப்பார்கள்! என்று எல்லாம் சந்தேகம் எழும்பும் அனைவர்க்கும் விடையாக அவதரித்தவர் பகவான். இதிஹாசங்களை உண்மையாகக் காட்டிய காலக் கண்ணாடியாக விளங்கியவர் பகவான். எதையும் யாருக்கும் நிரூபிப்பதற்காக முயலவில்லை அவர். ஆனால் சமகாலத்தவரும் பிற்காலத்தவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் பண்டைய ரிஷிகளின் மாண்பினையும் தவ வலிமையையும் கண்கூடாகக் காட்டியவர் பகவான். அறியாதவர்கள் கேட்கலாம். ‘பேசாமல் அசையாமல் நாட்கணக்கில் இருப்பதா? எங்களால் ஐந்து வினாடிகள்கூட அப்படி இருக்க முடியாதே! இதெல்லாம் கனவு!’ என்பார்கள். ஆனால் உலகக் காட்சியால் இடையறாது பிறர் ஈர்க்கப்படும் இளவயதிலேயே பகவான் அனைத்தையும் சங்கல்பம் இன்றியே நடத்திக் காட்டினார்.”

உபதேச உந்தியார், உள்ளது நாற்பது போன்ற ஆத்ம இமாலயங்கள், அஹம் விருத்தி, நிதித்யாஸனம், ஆத்ம விசாரம் போன்ற விஷயங்கள் எல்லாருக்கும் புரியாமல் இருக்கலாம். ஆனால் பகவான் கூறும் வழியில் பற்றற்று செய்யும் கர்ம யோகத்தின் மூலம் அந்தக் கரண-மன-சுத்தியை அடைய முடியும். பகவான் கூறும் நேர்வழியானது வெளி விவகாரங்களி லிருந்து மனத்தை உள்முகமாகத் திருப்பி சித்த சுத்தியை ஏற்படுத்திக் கொள்க.



வெளிவிடயம் விட்டு விளங்கும் அருணேசா
வளிஅடக்க நிற்கும் மனத்தால் - உளம்அதனில்
உன்னைத் தியானித்து யோகிஒளி காணும்
உன்னில் உயர்வுறும் ஈதுஉன்

*— (அருணாசல பஞ்சகம், 4)*

என்பது பகவான் காட்டும் நேர், எளிய வழி.

*பொருள்:* ஜோதி ஸ்வரூபமாய் விளங்கும் அருணாசலா! வெளிநோக்காமல், ஐம்புலன்களால் காணப்படும் விஷயங்களை நோக்காதே. பிராணாயாமத்தால் மூச்சைக் கட்டுப்படுத்து. உன் கவனத்தை இடைவிடாது ஆன்மிக இதயத்திலேயே நிலைபெறச் செய். அப்போது உள்ளே ஸ்வயம் பிரகாசமாய் ஆத்மாவை அறிவாய். இதுவே முக்தி நிலை என்கிறார் பகவான்.

இதற்கெல்லாம் ஏது நேரம்? என்னால் சேர்ந்தாற்போல் சிறிதுநேரம் எண்ணமற்று இருக்க இயலவில்லை. உள்முக நாட்டம் பெறவேண்டும் என்று தீர்மானித்து அமரும் ஒரு சில வினாடிகளிலேயே கொசு கடிக்கின்றதே! வெளியே பாட்டு கேட்கின்றதே! இன்று ரேஷன் வாங்கி வரவேண்டுமே! என்று மனம்

அலைபாயத் தொடங்குகிறது. பகவானிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது யாதுஎனில் எண்ணங்கள் குவியும்போது மனம் அலைபாய்வது குறைகின்றது. எனவே எண்ணத்தை ஒரு ஆதாரத்தின்மீது குவியச் செய்யவேண்டும். ஆரம்ப நிலையில் அதற்குச் சில எளிய வழிகள் உள்ளன. (1) பகவானின் திருரூபத்தையே சமயம் கிடைக்கும்போதெல்லாம் நோக்கிப் பாருங்கள். (2) எளிய வாழ்க்கை முறையைப் பயின்று தேவைகளைக் குறையுங்கள். (3) ஓய்வு நேசங்களில் வெளியே சுற்ற வேண்டும் என்ற முனைப்பை நிறுத்தி, வீட்டில் தியானம் பழகலாம். (4) நாவடக்கம் பயில்க. மௌனம் என்பது வெறும் வாய் பேசாமல் இருப்பதல்ல. அந்த சமயம் மனம் வழக்கத்தைவிட அதிகமாக அலைபாயலாம். ஏதேனும் மற்றவர்க்கு எழுதிக் காட்டலாம் என்ற துடிப்பு எழும். அம் மௌனம் நமக்கே ஒரு தடையாகத் தோன்றலாம். எண்ணம் எழும் இடத்தை நாடி, எண்ண எழுச்சியை அடக்குவதே மௌனம். (5) அப்போதும் மன ஓட்டம் அடங்க வில்லையெனில் பகவான் திருவுருவப் படத்தை உற்றுநோக்க முயலுங்கள். அவரது அருட்பார்வையால் சாதனை அனுபவமாகி, ஆணவம் அழியும். பலாப் பழத்தை அறுப்பவன் கையில் பிசின் ஒட்டாமல் இருக்க எண்ணெயைத் தடவிக் கொள்வதுபோல, பகவானின் நாமத்தைத் துணை கொள்க! (6) பகவான் வாழ்விலும், அன்பர் வாழ்விலும், சத்சங்க நிகழ்வுகளையும் திரும்பத் திரும்பப் படியுங்கள். அவர் பறவைகள், விலங்குகள், தாவரங்கள், தாழ்மக்கள் அனைவரிடமே எங்ஙனம் அன்புகாட்டி அரவணைத்தால் என்பதையும் படியுங்கள். நம் போன்றோர்க்கும் அவரது அருட்பார்வை வழிகாட்டும் என்ற நம்பிக்கை உறுதிப்படும். (7) பகவான் யாரைப் பற்றியுமே எவ்வளவு தவறான நடத்தை கொண்டவனாய் இருப்பினும் சரி, இழிவாகப் பேசியதேயில்லை. அவனிடத்தில் உள்ள மிகச் சிறு நற்பண்புகளையும் உயர்வாக

எடுத்துக்கூறுவார். இத்தகைய பண்புநலனை நாம் பகவானிடம் இருந்து பெறவேண்டும்.

பேரருள் கடலான பகவான் நம் உள்ளத்தே புகாமல் தடுப்பது எது? அற்ப ஆசைகள் என்னும் நமது ஜீவபோதமே. ஜென் தத்துவக்கதை கூறுவதுபோன்று முன்னமேயே முற்றிலும் நிறைந்திருக்கும் தேநீர்க் கோப்பையில் மேலும் தேநீர் ஊற்ற முடியாது அல்லவா? முதலில் நம் உள்ளத்தில் நிறைந்திருக்கும் ஜீவபோதம் என்னும் தேநீரை அகற்றி, உள்ளத்தைக் காலியாக வைத்திருங்கள். அப்பொழுது சிவபோதம் அந்த வெறுவெளியாக உள்ளத்தே புகுந்து நிறைந்துவிடும்.

எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று
என் மனக்கே வந்து, இடைவீடு இன்றி மன்னி

என்று நம்மாழ்வார் எழிலுறக் கூறுகிறார். பிற உலகப் பொருட்கள் மீது உள்ள பற்றை விட்டு, முழுதுமாய் என்னையே நினைத்திடு என்றுகூறி, என் காலியான உள்ளக் கோயிலில் புகுந்து, ஒரு சிறிதும் இடைவெளி இல்லாமல் கண்ணனே நிறைந்தான் என்கிறார் ஆழ்வார்.

இதே பொருளில் பகவான்,

பொடியால் மயக்கி என்போதத்தைப் பறித்துஉன்
போதத்தைக் காட்டினை அருணாசலா

மாயை ஆகிய ஜீவபோதத்தைப் பறித்து அழித்து, அருள் என்னும் உன் ஞானபோத்தைக் காட்டி அருளினை என்கிறார் பகவான். அவன் அருளின்றி ஜீவபோதத்தை அறுத்தல் கடினம். அவனே நமக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம். திசை தெரியாமல் தடுமாறும் ஜீவனுக்கு வழிகாட்டும மார்கதர்சி; வாழ்க்கைக் கலத்தின் மீகாமன்.

மீகாமன் இல்லாமல் மாகாற்று அலைகலம்
ஆகாமல் காத்தருள் அருணாசலா

*மீகாமனாகிய 'நீ' இல்லாமல் ஆசை என்னும் புயல் காற்றால் அலைக்கழிக்கப்படாமல், வழிகாட்டும் கலத்தலைவனாய் வந்து என்னைக் காத்தருள்வாய் என்கிறார் பகவான்.*

*இக்கருத்தினையே*

*பேசா இடும்பைகள் பேசிச் - சுத்தப்*
*பேய்அங்கம் ஆகிப் பிதற்றித் திரிந்தேன்*
*ஆசா பிசாசைத் துரத்தி - ஐயன்*
*அடிஇணைக் கீழே அடக்கிக் கொண்டான்*

*என்று தாயுமானவர் ஆனந்தக் களிப்பில் பாடுகிறார். "தவறானவற்றையே பேசி பேயாய்த் திரிந்த என்னை என் உள்ளே இருந்த ஆசை என்னும் பேயைத் துரத்தி, ஐயன், அடியேனைத் தன் திருவடிக் கீழ் அடக்கிக்கொண்டு அருளினான்" என்கிறார் தாயுமானவர்.*

*உலக இன்பங்களாய கோணலான பித்து என்னைப் பிடித்து ஆட்டி வந்தது. அந்தப் பித்தினை என்னை விட்டு நீங்குமாறு செய்து, உன்மேல் கொண்ட அளவற்ற பக்தி என்னும் நேரான பித்தினை எனக்கு ஊட்டினாய். உன்னை அடையவேண்டும் என்ற இந்த நல்ல ஆசைகூட ஒரு பித்துதானே! அந்த அருள் பித்தையும் தெளிவித்து உன் யதார்த்தமான 'உள்ளது' என்னும் உண்மை ஸ்வரூபத்தைத் தெரிவிக்கும் அருமருந்தை அருள்வாய் என்று அருணாசலனிடம் கூறுகிறார் பகவான். இறைவன்மேல் கொண்ட பக்தி என்னும் பித்தைத் தெளிவாக பித்து பிடிக்கச் செய்தவனே தெளிவிக்கும் மருந்தினை அருள வேண்டும் என்கிறார் பகவான்.*

*வீடு பெறவேண்டும் என்கின்ற தீவிர ஆவல் கூட ஒரு ஆசைதான். ஆனால் நல்ல ஆசை; அதுவும்கூட ஒரு பித்துதான் எனினும் ஏனைய உலக ஆசைகளைக் குறைத்து, முடிவில் அறவே நீக்கிட இந்த உயர்பித்து உதவுகிறது. ரமண சந்நிதிமுறையில் 'எந்நாட் கண்ணி'*



என்ற பாடலில், முருகனாரும் இதே கருத்தைக் கூறுகிறார்.

பற்றற்ற பாவனநின் பற்றாலே மற்றவற்றின்
பற்றுஅற்று நிற்கும் பதம்அடைவது எந்நாளோ! (149)

ரமண ஞானபோதத்தில் வரும் பாடல்களும் இதையே தெளிவாக்குகின்றன.

ரமண பதத்தை ரமித்தோனுக்கு ஆங்கே
சமனமாத் தீர்ந்தது உயிர்த் தாபம் யம நியம
சாதனை ஓய்ந்து அன்பு தழைத்தோன் அகந்தை மயல்
வாதனை ஓய்ந்து இன்ப மயத்து (1792)

பொருள்: ரமண பகவானின் திருப்பதத்தை உள்ளத்தே நிறுத்தி வழிபட்டு வரத் தொடங்கியபின் அகந்தை, உயிர்த் தாபம், ஆசைகளினால் ஏற்படும் துன்பம் - இவை அனைத்தும் ஓய்ந்து, பேரின்பம் பெருகுகிறது என்று கூறும் முருகனார், யமம்-நியமம் முதலிய யோக சாதனைகள்கூட ஓய்ந்து விட்டன. உள்ளத்தே ஞானம் மட்டும் தழைக்கின்றது என்கிறார்.

வஞ்ச வேதாள மயக்க வலைப்பட்டேன்
நெஞ்சிலே புக்கு நிரந்தரமாம் தந்நிலையில்

*செஞ்செவே ஆண்ட அருள் சிற்பரன் மெய்ச் சேவடிகீழ்*
*அஞ்சவே தன்னின் அயல்புலம் ஒன்றிலையே (1799)*

*பொருள்: தன்னில் அயலாக ஒன்றில்லாத பரமாத்ம அனுபவத்தில் தன்னைக் கொண்டு சேர்த்த இறைவன் அதற்கு வழிகாட்டுவான் ஆகி, உலகியல் முறைகளான வஞ்சம், பொருள் ஆசை, அதன் தொடர்பாய் எழும் கவலைகள் இவற்றை நீக்கி அருளுகிறான்.*

*ஆசைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் பந்தமே. விஷய வஸ்துக்களுடன் கூடிய தொடர்பே எல்லா ஆசைகட்கும் அடிப்படையான பந்தத்தை பகவான் முற்றிலும் அழித்து விட்டான் என்கிறார் முருகனார்.*

*நிட்டையிலே எனை நிறுவினான் சித்பதத்தில்*
*பட்டிமனக் கற்பனா பந்தம் அறுந்ததே (1806)*

*இதே கருத்து ரமண சந்நிதி முறையிலும் வெண்பாக் பகுதியில் கூறப்படுகிறது.*

*அருபரனாக நின்ற அருணாசலேசன்*
*குருப்பவனாக உருக்கொண்டான் - விருப்பு அவனுக்கு*
*அன்பரது வாழக்கை அநிச்சை அறப்பொங்கு ஒளிசேர்*
*இன்பமயம் ஆக்கல் ஒன்றே.*

*பொருள்: அறியாமை (அவிச்சை) என்ற அக இருளில் தடுமாறித் துன்புறுகின்ற அன்பர் நிலைகண்டு பெரிதும் பரிவுற்று, அவ்விருளைக் கிழித்து அகற்றும் ஞானஒளி பரப்பி, அவரை இன்ப மயமாக்குவதே அருணாசலனின் விருப்பம் ஆகும்.*

*(குருப்பவன்: பரமனை அறிந்த குரு; அவிச்சை: அவித்யை)*

*“ஆம்! இதெல்லாம் அறிவுரீதியாகப் புரிகிறது. ஆயினும் எப்படி இதை அனுபவபூர்வமாகக் கொணர்வது! எப்படி! என்று சிந்திக்கும்போது குழப்பம் ஏற்படுகின்றதே!” என்று அர்ஜுன விஷாதம் போன்ற குழப்பநிலை சாதனையைத் தொடங்கும்போது*

வரலாம். இதற்குத் தீர்வு எது?" "'ஐயனே! ஆத்ம சாட்சாத்காரம் பெறவேண்டும்' என்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் எப்படி ஞானம் பெறுவது என்ற வழியை அறியாமல் நான் வெற்று முயற்சி செய்வதால் தளர்ச்சிதான் ஏற்படுகிறது. அருணாசலா! எப்படி ஞானவழியில் முன்னேற வேண்டும் என்ற ஞானத்தையும் நீதான் எனக்கு அருள வேண்டும்" என்று அருணாசலத்திடம் பிரார்த்திக்க வேண்டும்.

ஞானம்இல்லாது உன் ஆசையால் தளர்வுஅற
ஞானம் தெரிந்தருள் அருணாசலா

பார்க்கப்போனால் நாம் ஆரம்பத்தில் காணும் இந்தக் குழப்பமே யோகத்திற்கு ஒரு படிதான். குழப்பமே யோகமா? என்ற ஐயம் எழலாம். சுயநலனுக்காக அன்றி ஞானத்தை அடையச் செய்யும் முயற்சியின் முதல் நிலையில் ஏற்படும் மனக் கலக்கமேகூட ஒரு யோகம்தான் என்கிறான் கீதாசார்யன்.

இந்தக் குழப்ப நிலையில் இருந்து, "இந்தக் கலக்கம் அடையாமல் 'நீ யார்?' என்பதைப் பார்! உள்ளே தேடு" என்கிறார் சத்குரு.

நான்என்று எழும்இடம் எதுஎன நாட, உள்
நான்தலை சாய்ந்திடும் உந்தீபற
ஞானவிசாரம் இது உந்தீபற.

இந்தப் பாடலுக்குப் பொருள் கூறும்போது வழக்கமாக 'உள்நாட' என்று அன்வயப்படுத்துவர். "நாட உள்நான் தலை சாய்ந்திடும்" என்று வேறுவிதமாகவும் அன்வயப்படுத்துகின்றனர் சிலர். புறத்தே நாம் சுட்டும் 'நான்' இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வசப்படும். அகத்தில் அமையும் அஹங்காரமான நான் சக்தி வாய்ந்தது. இது அகங்காரம், மமகாரம் என்னும் இரண்டு வடிவில் சாதகனைப் பிணைக்கிறது. இந்த 'உள் நானை' வைராக்யம் விவேகம் என்ற இரண்டின் மூலம் கட்டுப்படுத்தலாம். இந்த 'நான்' என்பது எங்கிருந்து

எழுகின்றது என்பதை அகநோக்குடன் உள்நாட இந்த 'நான்' தலைசாய்கிறது. சற்றே ஏமாந்தாலும் அவை மீண்டும் தலைதூக்கலாம். இந்த நிலையில் இருந்து, இடைவிடாத ஏகாக்ரமான 'நான் யார்?' என்ற ஞானத் தேடலைச் செய்வோம் ஆயின் இந்த 'நான்' பரமாத்மாவில் முற்றிலும் ஆகக் கரைந்துவிடும் என்கிறார் பகவான்.

*அகமுகம் ஆர்அந்த அமல மதிதன்னால்*
*அகம் இதுதான் எங்குஎழும் என்றுஆய்ந்தே - அகஉருவை*
*நன்குஅறிந்து முந்நீர் நதிபோலும் ஓயுமே*
*உன்கண் அருணாசலனே! ஓர்.*

*— (அருணாசல பஞ்சகம், 3)*

பொருள்: உள்முகப்படுத்திய கூர்மையான ஆய்வு அறிவால், குற்றம் ஏதும் இல்லாத தூய மனத்துடன் இந்த 'நான்' என்னும் ஜீவபோதம் எங்கிருந்து எழுகின்றது என்று தீர விசாரித்தால், 'நான்' என்னும் ஜீவபோதம் தன் உருவை முற்றிலும் இழந்து, கடலில் கலந்த நதிபோல தன்னுருவை இழந்து, இறைவனுடன் ஒன்றிவிடும்.

*மனத்தின் உருவை மறவாது உசாவ*
*மனமென ஒன்றுஇலை உந்தீபற*
*மார்க்கம் நேர்ஆர்க்கும் இதுஉந்தீபற*

*— (உபதேச உந்தியார், 17)*

மனம், மனம் என்று கூறிக்கொண்டே இருக்கிறோமே. அதன் உருவம்தான் என்னை சதா மாற்றி மாற்றி எண்ணங்களைப் பற்றி இயங்கிக் கொண்டு இருக்கும் மனதின் உருவம்தான் யாது என்று இடைவிடாமல் விசாரித்தால் 'மனம்' என்று ஒன்று இல்லவே இல்லை என்பது தெரிய வருகின்றது.

*அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக*
*இன்புஉருகு சிந்தை இடுதிரியாய் - நன்புருகி*
*ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்*

என்கிறார் பூதத்தாழ்வார். அன்பெனும் விளக்கில், ஆத்ம சாட்சாத்காரம் அடையவேண்டும் என்ற

ஆர்வமாகிய நெய்விட்டு, ஒருமுகப்பட்ட சிந்தையையே திரியாக்கி 'ஞானம்' என்னும் சுடர்விளக்கு ஏற்றமுடியும். இந்த ஞானச்சுடர் விளக்கே பகவான் கூறும் ஞானவிசாரம். 'ஞான் தீபோ பாஸ்வத' என்று கண்ணன் குறிப்பிடும் ஞானஒளி.

'நான் வேறு! நான் வழிபடும் சிவம் என்னிலும் மிக உயர்ந்த ஒன்று' என்பதும் அகங்காரத்தின் ஒருநிலையே. இந்த நிலையை நீங்கி அத்வைதப் படிக்கட்டில் ஏறுவது மூன்றாம் நிலை.

அன்னியனாம் சிவன் அன்னியன் நான் என்னும்
பின்ன பாவத்தைப் பெயர்த்திடுக

என்று ஆத்ம சாட்சாத்காரப் பிரகரணத்தில் பகவான் கூறுகிறார்.

மிகச் சிறந்த பக்தரான திருநாவுக்கரசரும் "நான் ஆரம்ப காலத்தில் சிவனை வெளியே தேடிக்கொண்டு இருந்தேனே!" என்று தன்னைப் பார்த்தே சிரித்துக் கொள்கிறார்.

"வெள்கி நானும் விலாவறச் சிரித்திட்டேனே"

என்பது அப்பர் வாக்கு.

இங்ஙனம் நான் பரமாத்மாவிலிருந்து வேறுபட்டவன் என்ற எண்ணம் நீங்கி, அவனும் நானும் ஒன்றே என்பதே இறுதியான அத்வைத முகிழ்ச்சி. இதுவே தியானம் தவம் பக்தி யோகம் என்று கூறப்படும் பல்வேறு சாதனைகளின் இறுதிநிலை.

இது மந்திரமாம் இது தேவதையாம்
இதுவே தியானம் எனலும் - இதுவே தவமாகும்

என்கிறார் பகவான்.

எல்லாவித இடையூறுகளையும் வென்று எல்லாப் பதக் கட்டுகளையும் தாண்டி, இப்போது ஜீவாத்மா தானே பரம் என்று உணர்ந்து பரத்துடன் ஒன்றாகும்

ஒப்பற்ற ஆனந்தநிலை அடைந்துவிட்டது. உள்ளம் என்ற எல்லை இல்லா வீட்டினில் ஜீவன் பரத்துடன் ஒன்றும் அத்வைத சாம்ராஜ்யம் இங்கே அருணாசலனை அழைப்பதுபோல் நம்மையும் அழைக்கிறார் பகவான்.

ராப்பகல் இல்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா

பகவானின் ஞானப் பேரொளியில் மூழ்க சேர்வாரும் ஜகத்தீரே!

மீண்டும் உரையாடுவோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

# இனிவரும் திருநாட்கள்

## 2020

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 11 | சனி | ஸ்ரீபகவானது 140 வது ஜயந்தி |
| | 15 | புதன் | பொங்கல் பண்டிகை |
| பிப்ரவரி | 8 | சனி | சின்ன ஸ்வாமிகள் ஆராதனை |
| | 13 | வியாழன் | சுந்தரம் ஐயர் தினம் |
| | 21 | வெள்ளி | மஹா சிவராத்திரி |
| மார்ச் | 25 | புதன் | தெலுங்கு வருடப் பிறப்பு |
| ஏப்ரல் | 2 | வியாழன் | ஸ்ரீராம நவமி |
| | 14 | செவ்வாய் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 20 | திங்கள் | பகவான் 70 வது ஆராதனை |

# பகவான் புத்தரும், ரமணரும் சந்திக்கும் சிறப்பு

**சு. பரமேஸ்வரன்**

பகவான் புத்தரும், ரமணரும் சந்திக்காத இடம் துறவறம் ஆகும். புத்தர் ஞானம் அடைந்தபோது மக்களை அறியாமையில் இருந்து மீட்டு அவர்களுக்கு அறிவை அடையாளம் காட்டுவது தமது கடமை என எண்ணினார். பல ஊர்களுக்கும் நடந்தே சென்று, மக்களை நல்வழிப்படுத்த முயன்றார். தான் ஒருவனால் மட்டுமே இப் பணியைத் திறம்படச் செய்ய முடியாது எனக் கண்ட புத்தர், சங்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். துறவறத்தை ஆதரித்தார். பிக்குகளுக்கு பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தினார். புத்தர் உருவாக்கிய சங்கம் கண்ட வெற்றியே, பிற்காலத்தில் சைவ மடங்கள், சங்கர மடங்கள் முதலியவை தோன்றுவதற்கு அடித்தளமிட்டது.

புத்தர் 29 வயதில் சத்தியத்தைத் தேடி வீட்டைத் துறந்து காட்டிற்கு ஏகினார். ரமணர் 17 வயதில் இறைவனின் அருட் கொடையாக அனுபூதி ஞானம் பெற்று வீட்டைத் துறந்து அருணையை அடைந்தார். ரமணர் துறவுக்குரிய புற அடையாளங்கள் எதையும் அணியவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் வெள்ளை ஒற்றைக் கோவணத்துடனேயே இருந்தார். ரமணரிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி ஒன்று துறவு பற்றியது. ஆன்ம சாதனைக்குக் குடும்பத்தைத் துறக்க வேண்டுமா? என்பது. அவர் இதற்கு எப்போதும் கூறும் பதில் ஒன்றுதான். துறவு என்பது மனதைப் பற்றியது. அது சூழ்நிலையையோ, புற விஷயங்களையோ பற்றியது அல்ல. இல்லறத்தில் இருந்துகொண்டே

மனதில் பற்று இல்லாமல் இருக்கலாம். காட்டில் இருந்துகொண்டு, புறத்தில் விட்டவைகளை எண்ணிக் கொண்டு, தான் துறவி என்று நினைத்துக்கொண்டு இருப்பதில் ஒரு பயனும் இல்லை. குடும்பத்தையும், தொழிலையும் விட்டு விடலாம்! ஆனாலும், உனது மனம் எப்போதும் உன்கூடவே வருமே! என்பார். குடும்பஸ்தன் என்பதற்குப் பதிலாய் துறவி என்று நினைக்கிறாய்! ஆன்மா சாதனைக்கு புறத்தில் உள்ள எதுவும் தடை கிடையாது. மனத்துறவே முக்கியம் என்பார். ரமணர் தனக்கென ஒரு ஆஸ்ரமமோ, ஒரு ஸ்தாபனத்தையோ ஏற்படுத்தவில்லை. 54 ஆண்டுகள் திருவண்ணாமலையை விட்டு எங்கும் சென்றதில்லை. ஞான தாகத்தோடு நாடி வருபவர்களுக்கு அவரது சந்நிதி மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது பலரது அனுபவம். அவரது அருள் விலாசம் இன்றும் பலரை ஈர்க்கிறது.

அன்பும், அறனும் வாழ்க்கையில் பொங்கி வழியும்போது அருள் நிலை உருவாகிறது. இல்லறமாயினும், துறவறமாயினும் சரி, கண்டிப்பாய் கடைப்பிடிக்க வேண்டியது வைராக்கியமும், தியாகம்தான்! சந்நியாச வேடம் அல்ல! மனம் இருந்தால் மட்டுமே சத்திய தரிசனம் எனும் மெய்யுணர்வு பிறக்கிறது. இறப்பு என்பது இங்கு அழித்தலைக் குறிப்பது அல்ல அது ஒருவகை நிலை மாற்றம். அத்தகைய மன மாற்றத்தையே ரசவாதக் கலை என்பர் கற்றோர்.

*சித்தமலம் அறிவித்துச்*
*சிவமாக்கி எனை ஆண்ட*
*அத்தன் எனக்கு அருளியவாறு*
*ஆர் பெறுவார் அச்சோவே!* — *மாணிக்கவாசகர்*

புத்த மதத்தில் பக்திக்கு இடமில்லை. துறவறத்திற்கும், ஒழுக்கத்திற்குமே முதல் இடம்.

ஆன்ம வளர்ச்சிக்கு ரமண மகரிஷி வகுத்த வழிகள் இரண்டு. தன்னை நான் யார்? என்று விசாரம் செய்யும் அறிவு நெறி. மற்றது, பரம்பொருளிடம் தன்னை முழுவதும் ஒப்படைத்துவிடும் ஆன்ம சமர்ப்பணம் என்னும் அன்பு நெறி.

யாவர்க்கும் வழிகள் இரண்டே. ஒன்று தன் மூலத்தை
நுண்ணுணர்வால் உணர்ந்து அதுவாய் இருத்தல் மற்றது
எவ்வித பின்வாங்கலும் இன்றி, இறைவனை முற்றிலும்
சரணடைய வேண்டும் — ரமணர்

மேலோட்டமாகப் பார்த்தால் அவை இரண்டு வழிகள் போலத் தோன்றினாலும், உண்மையில் அது ஒன்றே! பக்தன் கடவுளை நாடுவதுபோல ஒரு வேற்றுமை காணப்பட்டாலும், உண்மையில் செய்முறையிலும் முடிவு நிலையிலும் இரண்டும் ஒன்றே. எப்படியெனில், புறப் பூசனைகள் ஆன்ம சமர்ப்பணம் ஆகாது. தனக்கு அது வேண்டும் என்று புலம்பலும் கூடாது.

உண்மையான பூசனை, ஆத்ம சமர்ப்பணம், அது யாது? இதோ தவராஜர் கூறுகிறார்:

துள்ளும் அறியா மனது பலி கொடுத்தேன்
கர்ம துஷ்ட தேவதைகள் இல்லை.
துரிய நிறைசாந்த தேவதையாம் உனக்கே!
தொழும்பன் அன்பு அபிஷேக நீர்
உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம்,
பிராணன், ஓங்கும் அதி தூப தீபம்
ஒருகாலம் அன்று, இது சதா கால
பூஜையா ஒப்புவித்தேன்!
பாடல் புகட்டும் செய்தி என்ன?

இறைவனுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியது நமது அகந்தையைத் தவிர, தேங்காய், பழம் போன்ற பிறவஸ்துக்கள் அல்ல. நமது அலங்காரத்தை ஆண்டவனிடம் சமர்ப்பிப்பது சரணாகதி தத்துவம் ஆகும்.

புத்தரும் சரியை, கிரியை யோக மார்க்கத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் ரமணர் அவ்வழிகளைப் பின்பற்றியோரை மறுக்கவும் இல்லை. மாறாக அவைகளின் லட்சியம் என்ன? என்பதை அவர்களுக்கு அன்புடன் நினைவூட்டுவார். 63 நாயன்மார்களும் ஆழ்வார்களும் அஷ்டாங்க யோக நெறியில் நின்று ஞானம் பெற்றதாக வரலாறு இல்லை. திருமூலர், பட்டினத்தார், மாணிக்கவாசகர், தாயுமானவர், வள்ளலார் என வாழையடி வாழையாக வந்த தமிழர் நெறியே ரமணர் நெறி எனத் துணிந்து கூறலாம்

விஞ்ஞான காலத்திற்கு ஏற்ற அவரது வழி அமைந்தது, காலத்தின் கட்டாயம் போலும்! நம் முன்னோர்கள் வாழ்க்கை நெறிகளை, லட்சியங்களை அகம் புறம் என வகைப்படுத்தினர். சங்க இலக்கியங்களான குறுந்தொகை, அகநானூறு போன்றவை தனி மனித இன்பத்தை, காதலைப் பற்றி பேசினாலும், அதன் மையப்புள்ளி சற்று மாறி தெய்வீகக் காதலாக மாறும்பொழுது பக்தி பனுவலாகப் பரிணமிக்கிறது. திருவாசகம், திருப்புகழ், அருட்பா, தேவாரப் பாடல்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். நாயகி, நாயகன் பாவத்தோடு அருணை மலையையே இறையுருவாய் எண்ணி, கசிந்து, கண்ணீர் மல்கி, எவ்வித முயற்சியும் இன்றி, சுயமாய் தன்னுள் எழுந்த அருட்பாடல்களே ரமணரது அருணாசல அக்ஷரமணமாலை, அருணாசல அஷ்டகம். இவை உள் ஒளியால் எழுந்த தோத்திரப் பாடல்கள் ஆகும்.


அருணாசல சிவ அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசலம் என அகமே நினைப்பவர்
அகத்தை வேரறுப்பாய் அருணாசலா!

நாயகி என்று அகம், தலைவனாகிய அருணாசலத்திடம் தனது அகத்தை நீக்கி உன்னுள் ஐக்கியப் படுத்திக் கொள்! என முறையிடுகிறது. அருணாசலம் என்பது ஒரு ஜடப் பொருள் அல்ல.



*எல்லா உயிர்களிடத்தும் ஒளிரும் ஆன்மா என்பது ரமணரது கருத்து. அது கால, தேச நாம ரூபம் கடந்த மெய்ப்பொருள். ரமணரது வாழ்வு பக்திக்கும், ஞானத்திற்கும் இலக்கணமாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது.*

புத்தரின் தலையாய கோட்பாடு ஒழுக்க நெறிகளும், எல்லையற்ற கருணையும் ஆகும். கருணையே நிர்வாண நிலைக்குரிய திறவுகோல் என்பார் புத்தர். கருணை அல்லது ஜீவகாருண்யம் என்பது கொல்லாமையாகும். கொல்லாமை என்பது உயிர்களைக் கொல்லாதிருத்தல் மட்டுமே பொருளல்ல. எவ்வுயிரையும் எந்த வகையிலும் துன்புறுத்தாமை என்பதே இதன் மறைபொருளாகும். எப்படியெனில், நேர்மையற்ற வழியில் பொருளீட்டுவதும், கடுஞ் சொற்களால் பிறரை வசைபாடுவதும், அவர்களது அறியாமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதும் ஒரு வகை இம்சைதான். கொல்லா விரதமுடையோர் உணர்ச்சி வசப்படார். எவ்வகையிலும் நியாயப்படுத்தார். அன்பு,



இரக்கம், உண்மை பேசல், சமநிலை முதலிய பண்புகள் கொல்லாமையின் பலன்களாகும். நாத்திகர்களும் பிற மதத்தினரும், துஷ்டர்களும் புத்தரைப் போற்றக் காரணம் அவரது எல்லையற்ற கருணையே ஆகும். இந்திய நாட்டின் ஆன்மிக தீபத்தை உலக அரங்கில் முதலில் ஏற்றிய பெருமை பகவான் புத்தரைச் சாரும்.

ரமண மகரிஷி கொல்லாமை மற்றும் ஒழுக்க நெறிகளை யாருக்கும் போதனை செய்யவில்லை. மாறாக அவற்றையெல்லாம் தன் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகி, மற்றவர்களுக்கு வழிகாட்டினார். அவரது வாழ்வே உபதேசம். தன் வாழ்நாளில் யாரையும் கடிந்து பேசியது இல்லை. எல்லோரும் சமம். அவரது அன்பும் கருணையும் எல்லை கடந்ததாக இருந்தது. அஃறிணை உயிர்களிடத்தும், செடி, கொடிகளிடமும் அன்புகொண்டு ஒழுகினார். பிறரது கொள்கைகளை ஒருபோதும் மறுத்துப் பேச மாட்டார். அதிலுள்ள நுட்பத்தை விருப்பத்துடன் அவர்களுக்கு எடுத்துரைப்பார். ஞானிகளையும், சான்றோர்களையும் நமக்கு அடையாளம் காட்டுவது அவர்களது குண

*நலன்களே தவிர சாஸ்திர ஞானம், துறவு, பட்டம் பதவி அல்ல என்பர்.*

*ரமண மகரிஷியை சாதாரண பாமரன் முதல் மகாராஜா அவரை யாரும் எப்போது வேண்டுமானாலும் தரிசனம் செய்யலாம். அவருக்கு என ஒரு தனி அறை கூடக் கிடையாது. ரமணர் நோயுற்ற சமயம்கூட, தன்னைத் தரிசிக்க வருபவர்களை தடை செய்யக்கூடாது என்றார்.*

*ரமண மகரிஷியின் தேக வாழ்வின் இறுதியில் கையில் ஒருவகைப் புற்றுநோய்க் கட்டி தோன்றியது. மூன்று முறை அறுவை சிகிச்சை செய்தும், அது மீண்டும் பெரியதாக வளர்ந்தது. அறுவை சிகிச்சையின்போது மயக்க மருந்துகூட வேண்டாம் என்று தடுத்து விட்டார். ஒரு அன்பர், "கையில் வலி இல்லையா?" என்று கவலையுடன் வினவ, "வலி இருக்கிறது. ஆனால் அது யாருக்கோ, நமக்கு அது அந்நியமே" என்றார் பகவான் ரமணர். கொடிய நோயின் இடையிலும் நகைச்சுவையோடு பேசுவார். தம் நோயைக் கண்டு கண்ணீர் விடும் பக்தர்களிடம், "இவ்வுடம்பே நமக்கு வந்த பவ நோய், அந்நோய்க்கு ஒரு நோய் வந்தால் நமக்கு நல்லதுதானே!" என்பர். பகவான் நம்மை விட்டுப் போய்விட போகிறாரே! இதை நாங்கள் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறோம்? என அழுது புலம்பும் பக்தர்களைப் பார்த்து, "நாம் எங்கே போவது? எப்படிப் போவது? பகவான் என்பது இந்த உடல் என்று எண்ணுவதால் தான் இப்படிக் கூறுகிறீர்கள். போக்குவரவு என்பது உடலற்கே. நான் இங்கேயேதான் இருக்கிறேன். உடல் இல்லாவிடிலும் நிலை ஒன்றுதான்!" என திருவாய் மலர்ந்தார்.*

*கூலிக்கு எடுப்போன் குறித்த இடம் கொண்டுபோய்*
*அச்சுமையை இறக்கல் எனச் — சாலச்*
*சிறக்கும் மெய்ஞ்ஞானியும் இத்தேகச் சுமையை*
*இறக்கியே சிந்தை மகிழ்வான்!*

*ரமணர் பரிபூரணம் அடைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு மிகவும் களைப்புற்று, அன்ன, பானம் ஏதுமின்றி கண்மூடியே இருந்தார். அன்னாரது உடல் மறைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு சபையில் மிகச் சோகத்துடன் கூடியிருந்த பக்தர்கள் திடீரென, அருணாசல சிவ! அருணாசல சிவ! என்ற அவரது அக்ஷரமணமாலை பாடல்களை உரத்த குரலில் பாடத் தொடங்கினார்கள்.*

*தன் தந்தையான அருணாசலனுடைய நாமத்தைக் கேட்டவுடன் ரமணர் கண்களைத் திறந்தார். ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது. அணுக்கத் தொண்டர் துணியால் கண்ணீரைத் துடைக்கத் துடைக்க அது வெள்ளமாய்க் கசிந்தது. பிராணன் தன்னுள் அடங்கியபோது, அவரது அறையில் ஒரு பேரொளி தோன்றி, வியாபித்துப் பரவி, ஆகாயத்தில் சுடரொளியாய் நகர்ந்தது. தெருவில் கூடியிருந்த மக்கள் ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி, "அதோ ஜோதி, ஜோதி போகின்றது!" என்று கூவினர். அந்தப் பேரொளி மெல்ல வடக்கு நோக்கி நகர்ந்து அருணை மலையின் உச்சியில் சென்று மறைந்தது*

*அவரது திருமேனி, திருமந்திரத்தில் கூறியபடி சமாதி செய்விக்கப்பட்டு அதன் மீது லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. "தான் இவ்வுடல் அல்ல, பரம்பொருளேதான்" என்ற சதா நிஷ்டரான ரமண மகரிஷிகளின் அருட்சந்நிதி இன்றும் தனிப்பெரும் கருணையாய், இன, மொழி, மதங்களுக்கு அப்பால், ஞானத் தாகமெடுத்து வரும் அன்பர்களுக்கு ஜோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்று மோனமாக என்றென்றும் அருளமுதம் ஊட்டி வருகின்றது. போதி மாதவன் வாழி! அருணை வாழ் குரு வாழி! அன்பர்களும் வாழி, வாழியே!*

# அக்ஷர மணமாலை
# ஒரு தத்துவக் கருவூலம்

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

### பகுதி-16

*சம்சார வாழ்வில் பல்வேறு விதமான அனுபவங்களை பெற்று இன்பம் துன்பம் என்னும் இருமைகளின் தூண்டுதலால் அல்லல் படும் மக்களுக்கு, வேதாந்த விசாரங்களும் தத்துவ விளக்கங்களும் மனோ நிம்மதியைக் கொடுத்து உதவுகின்றன. இந்த நோக்கத்தில் உலகில் பல்வேறு சித்தாந்தங்கள் தோன்றின. அவற்றில் சில மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எஞ்சியவை காலப்போக்கில் அழிந்தும் போயின; வேறுசில சித்தாந்தங்கள் பிற்காலத்தில் முக்கியமான மாற்றங்களை அடைந்தன. இந்தப் பின்புலத்தில் ஆராயும்போது ஐயாயிரம் ஆண்டுகளாக நம்முடைய சித்தாந்தம் பெரிய மாற்றங்கள் இன்றி பின்பற்றப பட்டு வந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது. உலகத்தின் மிகப்பழமையான வேதாந்தம் என்ற புகழ் மட்டுமல்லாது, இன்றும் அந்தக் கருத்துக்கள் நிலை பெற்று நிற்கின்ற ஒரு பெருமை நம் தத்துவங்களின் அடிப்படை ஆழத்தை பறைசாற்றுகிறது. இதற்கு ஒரு முக்கிய காரணம் மாந்தர்கள் பலதரப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களுக்கு பலனளிக்கும் முறையில், தத்துவ தர்சிகளான நம்முடைய சான்றோர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பாதைகளை செப்பனிட்டு கொடுத்திருப்பதே ஆகும்.*

*சமுதாயத்தில் மக்கள் வெவ்வேறு படிக்கட்டுகளில் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுத்திறன்,*

பொருளாதார நிலை, மனப்போக்கு மற்றும் வேதாந்த தேடல் என்ற இவை அனைத்தும் மாறுபட்டு இருக்கின்றன. இவர்கள் அனைவருக்கும் ஒரே மார்க்கம் என்பது சாத்தியமல்ல. இதை உணர்ந்த நம் முன்னோர்கள் மனதால், அறிவால், செயலால் முன்னிருத்தக் கூடிய மூன்று முக்கிய வழிகளை நமக்கு அளித்தனர். அவையே, பக்திகர்மஞான மார்கங்கள் ஆகும்.

பக்தி மார்க்கம் என்பது சிலருக்கு பயனுள்ளதாக ஆகிறது அவர்கள் இறைவனை சிலைவடிவில் ஆலயங்களில் பார்க்கிறார்கள்; அவனுடைய கல்யாண குணங்களை கேட்கிறார்கள்; அவன் நாமங்களைப் பாடுகிறார்கள். அவர்களுக்கு அந்த சித்தாந்தம் மிகவும் பொருத்தமாக அமைகிறது.

வேறு சிலர் கர்ம மார்க்கத்தை பின்பற்றுகிறார்கள். அக்னி வளர்த்து வேள்விகள் மூலம் இறைவனை வழிபடுகிறார்கள். முறைப்படி செய்யப்பட்ட யாக கர்மாக்கள் அவர்களுக்கு பல்வேறு விதமான பலன்களை அளித்தன என்று நம் புராணங்கள் காட்டுகின்றன. காலப்போக்கில் இவை முக்கியத்தை இழந்தன. ஆனால் இன்றும் சடங்குகள் சமுதாயத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்த அளவில் கர்மாக்களுக்கு இன்றும் தேவை இருக்கிறது என்பதை உணரலாம்.

ஞான மார்க்கம் வெளி சாதனங்களால் அன்றி உள்ளுணர்வால் அமைவது. இவ்வழி செல்வோர், மனதை ஒருமைப்படுத்தி இறை சக்தியை உணர்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்த்து போல, ‘நானே இறைவன்’ என்ற புரட்சிகரமான நிலைபாட்டை உலகத்திற்கு உணர்த்திய ஒரே சித்தாந்தம் இந்திய வேதாந்தம் ஆகும். இதுவே ‘அஹம் பிரம்மோஸ்மி’

என்ற உபநிஷதக் கருத்தாக உணரப் படுகிறது. ஆனால் இது சிலருக்கு மட்டுமே கைகூடும் நிலை. சாதாரண மனிதர்களுக்கு இது சுலபமாக ஏற்புடையதல்ல.

இந்த மாறுபட்ட தத்துவங்களில், சில சித்தாந்தங்கள் ஆசாரியனுக்கு முக்கியத்துவம் அளித்து, அவனுக்கு தொண்டு செய்தாலே இறைவன் அடியை நாம் அடைய முடியும் என்று வாதிடுகின்றன.. ராமானுஜர் என்னும் ஆசாரியன் நமக்கு செல்வம், அறிவு மற்றும் நல்வாழ்விக்குத் தேவையான எல்லாவறையும் அருளக்கூடியவர் என்று திருவேங்கடத்தமுதனார் என்னும் வைணவ அறிஞர் உரைக்கிறார். ஆசாரியன் வழிகாட்டியாக மட்டுமல்லாமல் இறை சொரூபமாகவும் இருக்கிறான் என்பது இந்த கோட்பாடுகளின் அடித்தளம். இந்த முறையில் குரு பரம்பரைகளையும், ஞானிகளையும், சித்தர்களையும் நாம் இன்றளவும் போற்றி வணங்குகிறோம்.

இவ்வாறு பக்தி, கர்ம, ஞான மார்க்கங்கள் நம்முடைய ஆணி வேராக அமைகின்றன. இந்த தத்துவங்கள் எல்லாம் மூன்றுவித அமைப்புகளாக ஏற்கப்பட்டன அவையே துவைதஅத்வைத விசிஷ்டாத்வைத கோட்பாடுகளாகும். அவற்றுள் துவைதம் என்பது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டானவை என்ற கருத்தை வலியுருத்தும். சுருக்கமாகச் சொன்னால் இறைவன் என்பவன் மிக உயர்ந்தவன். நாம் தாழ்ந்த ஜீவராசிகள். அவனை வழிபட்டு அவனுக்குத் தொண்டு செய்வதே இந்த தத்துவத்தின் விளக்கம். இதற்கு எதிர்மறையாக அத்வைதம், 'பரம்பொருள் என்பது வேறு ஜீவாத்மா என்பது வேறு' என்ற எல்லைகளை ஏற்க மறுக்கிறது இவை இரண்டும் ஒன்றே, இத்தகைய பேருண்மையை உணர்வதே நம் வாழ்வின் பயன் என்பது இந்த தத்துவத்தின் கோட்பாடு. இடைப்பட்ட நிலையிலே விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவம் அத்வைதத்தின்

வேறொரு விளக்கமாக வழங்குகிறது. இதில் துவைத மதத்தின் பக்திமார்க்கமும் அத்வைதத்தின் ஜீவாத்மா பரமாத்ம அபேதமும் ஏற்கப்படுகின்றன.

மேற்கூறிய சித்தாந்தங்களைத் தோற்றுவித்த நம் முன்னோர்கள், இவை எல்லாம் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட தனிப் பாதைகள் அல்ல என்பதையும் அழகாக எடுத்துக் காட்டினார்கள். பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள தூரத்தைக் குறைத்து, அவன்பால் நம்மை அழைத்துச் செல்வதே இவற்றின் நோக்கம் என்பது புலனாகிறது.

இதற்கு ஒரு சிறந்த உதாரணம் கண்ணன் என்னும் ஒரு கருந்தெய்வம். இவன் மூலம் எவ்வாறு மூவகை சித்தாந்தங்களையும் விளக்கலாம் என்று நோக்கலாம்..

இறைவன் பக்தர்களைக் காக்க பல அவதாரங்களை எடுக்கிறான். சில அவதாரங்கள் ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்காக அமைகின்றன மச்ச, கூர்ம, வராக. நரசிம்ம அவதாரங்கள் இதற்கு எடுத்துக்காட்டு இதேபோல சைவத்திலும் இறைவன் பல திருவிளையாடல்களைச் செய்கின்றான். அவை அவனுடைய அடியார்கள் படும் துயரத்தை நீக்கி அவர்தம் பெருமையை உலகில் நிலைநாட்டுகின்றன. ஆனால் ராம கிருஷ்ண அவதாரங்கள் இவ்வாறு ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒரு வாழ்க்கை சரித்திரமாக அமைகின்றன. அதனால் இவை பூரண அவதாரங்கள் எனக் கருதப்படுகின்றன. இவற்றுள் கிருஷ்ண அவதாரம் பல லீலைகளை கொண்டதாய் நம்மைக் கவர்கிறது இவற்றின் மூலமாக நாம் மேற்கூறிய மூவகை சித்தாந்தங்களுக்கும் பொருத்தமான விளக்கங்களைப் பார்க்கலாம். முதலில் குழந்தைக் கண்ணனாகவும், இரண்டாவது நிலையில் கோபியருள்ளம் கவர்ந்த சிருங்கார நாயகனாகவும் அவன் நமக்கு உபதேசம் செய்கிறான். மூன்றாவதாக,



*அவன் நமக்கு மிகவும் நெருக்கமான பல்வேறு உறவு வடிவங்களில் உலவுகிறான். இறுதியில் நான்காவது நிலையில் அவன் கீதாசாரியனாக தத்துவ விளக்கம் அளிக்கிறான்.*

கண்ணனின் குழந்தைப் பருவத்தைப் பல பக்தர்கள் அநுபவித்தனர். ஆனால் அவனுடைய ஒவ்வொரு பருவத்தையும் அழகாக வருணிக்கும் பெரும் பேறு பெரியாழ்வாருக்கு மட்டுமே கிடைக்கிறது அவன் தீராத விளையாட்டுப் பிள்ளை. ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு விளையாட்டு. அதைத் தாய்மை பாசத்துடன் ஆழ்வார் வருணிக்கிறார். தாலேலோ என்று பாடித் தூங்க வைக்கிறார் அம்புலிப் பருவத்தில் சந்திரனை அழைக்கிறார். செங்கீரைப்பருவம் ஒரு அழகிய வர்ணனை. 'எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை' என்று பாடி மகிழ்கிறார் பிறகு சப்பாணி பருவம் அதைத்தொடர்ந்து குழந்தைக் கண்ணனின் தளர் நடை பருவம். கண்ணன் கருமையான நிறம் படைத்தவன்

வெண்ணையை திருடி தின்று தின்று உடல் பருத்து இருக்கிறது. அவனால் பருமனான உடலைச் சுமந்து கொண்டு வேகமாக நடக்க அவனால் இயலவில்லை. அண்ணன் பலராமனோ பனிபோன்ற வெண்மையான நிறம் கொண்டவன். நல்ல உடல்வாகு. அவன் வேகமாக 'மொடு மொடு'வென்று ஓடி வருகிறான். இதை ஆழ்வாரின் வரிகளில் பார்ப்போம்.

முன் நல் ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன்
மொடுமொடு விரைந்து ஓடப்
பின்னைத் தொடர்ந்த்து ஓர் கருமலைக் குட்டன்
பெயர்ந்து அடியிடுவது போல்

அப்படியே இரண்டு குழந்தைகள் தளர்நடை பயிலும் காட்சி கண்முன் விரிகிறது. ஒரு அழகிய வெள்ளைக் குழந்தை வேகமாக நடந்து வர, சற்று தூரத்தில் உடல் பருத்த கருநீலக் கண்ணன் சற்றே சிரமத்துடன் நடக்கும் அந்த லீலை உள்ளத்தை ஈர்க்கிறது!! இந்த 'சலார்பிலார்', 'மொடுமொடு' என்னும் பிரயோகங்கள் ஆழ்வாரின் தாய்மை உள்ளத்தின் வெளிப்பாடு. இந்த நிலைகளில் கண்ணன் நம்மிடமிருந்த மாறுபட்ட ஒரு அம்சமாக விளங்குகிறான். இது துவைத பாவத்தின் உன்னத உதாரணம்.

அடுத்த நிலையில் அழகு நிறைந்த சிருங்காரக் குமரனாக அவனைப் பர்க்கிறோம். கண்ணனைக் காதலனாகப் பார்த்த ஆண்டாள், வஞ்சகப் புகழ்ச்சியாக அவன்பால் தன் அன்பை வெளிக்காட்டுகிறாள். அவனுக்கு அவள் சூட்டும் வசை மொழிகள் அடேயப்பா சொல்லி மாளாது. 'ஏலாப் பொய்கள் உரைப்பான்' அதுமட்டுமா, அவன்' தருமம் அறியா குறும்பன்' அது மட்டுமல்ல அவன் ' பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்.' ஆனால் அவளுக்கு அவனிடம்தான் காதல். அவள் கனவில் செய்த கலியாண வைபவமே இன்றும் வாரணமாயிரம் என்னும் பதிகங்கள் வாயிலாக நம்மை மகிழ்விக்கிறது. உள்ளம்

*கவர்ந்த காதலனாக அவள் மட்டுமல்ல, ஆயர்பாடியிலே இருக்கக்கூடிய ஐந்து லட்சம் பெண்களும்கூட அவனைக் காதலனாகவே காண்கின்றனர். அவனிடம் மாறாக் காதல் கொண்டு அவனுடன் யமுனைகரையில் நடனமாடுகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவன் பிரத்தியேகமாக லீலைகளை நிகழ்த்தி காட்டுகிறான். இதை 'ராசகிரீடை' என்னும் காட்சியில் காண்கிறோம் ஒவ்வொரு இடைப் பெண்ணுடன் ஒரு கண்ணன் காட்சி தருகிறான். எல்லாவற்றுக்கும் பொதுவாக இடையிலே ஒரு கண்ணன்!!*

***(அங்கனாம் அங்கனாம் அந்தரே மாதவம்)***

*என்ற அழகிய வரிகளில் இதை நாம் பார்க்கிறோம். நாராயணியம் என்னும் நூல் இதை வருணிக்கும் அழகே தனி.*

*ராஸகேலி பரிபூஷிதம் தவஹி ரூபமீச கலயாமஹே*

*'அவன் அழகிய வடிவம் இந்த ராசக்கிரீடைக்கென்றே ஏற்பட்டது போல இருக்கிறது.அந்த உருவத்தை வணங்குகிறேன்.' என்று பட்டத்ரி என்னும் கேரள நாட்டு பக்தர், நேரில் கண்டு மகிழ்கிறார். முழுக்க முழுக்க சிருங்கார ரசம் கொப்பளிக்கும் இந்த காட்சியிலே நாம் உணர்வது என்னவோ மிக உயர்ந்த பக்தி பாவமே. இது நாம் குறிப்பிட்ட மூவகை சித்தாந்தங்களுக்கும் பொருந்தும் என்றாலும் இதன் மூலம் துவைத சித்தாந்தமே. இதன் முற்றிய பரிமாண நிலையை அடையும் போது, பேதாபேத நிலைகளைக் கடந்து இந்த அநுபவம் விசிஷ்டஅத்வைத சித்தாந்தங்களாக விரிவடைகிறது. இதுவே இந்த மதுர பாவத்தின் பெருமை.*

*பல பக்தர்கள் கண்ணனைப் பலவித தோற்றங்களில் கண்டார்கள் ஆனால் ஒரே ஒரு மனித உள்ளம் மட்டும் அவனை வேறுபட்ட பலவிதங்களில் பலவடிவங்களில் கண்டு ரசித்தது. யார் அந்த பக்தர்? அதற்கு விடையைத்*

*தேடி வெகு தூரம் செல்ல வேண்டாம். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் என்ற அந்த ஒரு மாபெரும் கவிஞர்தான் கண்ணனை எத்தனை எத்தனையோ தோற்றங்களில் பாடி வணங்கி மகிழ்ந்து, நம்மையும் மகிழ்விக்கிறார்.*

*கண்ணன் அவருக்குத் தாயாக, தந்தையாக காட்சியளித்தான். பொன் ஒளிர் மேனி சுபத்திரை மாதைப் புறம் கொண்டு செல்ல வழிசொல்லும் தோழனாக அவனைக் கண்டார். அவனே அரசன், அவனே நாடு முழுவதும் சுற்றி பாரதி கண்டெடுத்த வெள்ளை தாடி கொண்ட சத்குரு; ஆனால் அதே கண்ணனே பாரதியின் சீடன். அந்தக் குழந்தைக் கண்ணம்மா பிள்ளைக் கனியமுது. அவள் ஓடி வருகையில் உள்ளம் குளிர, அவளை உச்சி முகர்ந்தால் கர்வம் ஓங்கி வளர, அவளை தழுவினால் உன்மத்தம் பிடிக்க, அதுமட்டுமா அவள் கண்ணில் நீர் வழிந்தால் இவர் உள்ளத்தில் உதிரம் கொட்ட. இவ்வாறு பலவித சுவையான அநுபவங்கள் பெறுகிறார். இன்ப கதைகளெல்லாம் இவளைப் போல் ஏடுகள் சொல்வதில்லை என்ற உணர்வு ஏற்படுகிறது. இந்த குழந்தை அனுபவம் கண்ணம்மா என்றும் பெண்ணாக மட்டுமன்றி, கண்ணன் என்னும் விளையாட்டுப் பிள்ளையாகவும் மலர்கிறது.*

*அது மட்டுமல்ல. அந்த கண்ணனே என் காதலன் என்று ஐந்து பாடல்களில் வருணிக்கும் பாரதி அவனை கண்ணம்மா என்னும் காதலியாகவும் ஆசை தீர ஆறு பாடல்களில் காண்கிறார். இவ்வாறு வேறு எந்த ஆழ்வாரும் பக்தரும் காணமுடியாத நிலையில் கண்ணனைக் காதலியாகவும் காதலனாகவும் கண்ட ஒரே பக்தர் பாரதியார் தான். அவனே தெய்வமாகவும் ஆகிறான்.*

*இதெல்லாம் கூட புரிந்துகொள்ள முடிகிறது ஆனால் இதையெல்லாம் தாண்டி பாரதி அவனை எடுபிடி*

வேலை செய்யும் ஒரு சேவகன் ஆகவும் தன் உள்ளத்தில் காண்கிறார் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது கூலி மிகக் கேட்டு ஓயாமல் பொய்யுரைத்து ஒன்று உரைக்க வேறு காரியம் செய்யும் சேவகரால் மிகவும் சிரமம் பட்டு அவதிப்படுகிறார் பாரதி. அந்த நிலையில் கண்ணன் எங்கிருந்தோ வருகிறான். 'நான் இடைச்சாதி' என்று சொல்கிறான்/அவர் துயர் நீங்க அனைத்து வேலைகளையும் பொறுப்பாய் செய்கிறான். அவன் வந்த நாள் முதல் விசாரம் ஏதுமின்றி வாழ்கிறார். முடிவில் சொல்கிறார்,

*கண்ணனை நான் ஆட்கொண்டேன் கண்டு கொண்டேன்*
*கண்டுகொண்டேன்.*
*கண்ணன் என்னை ஆட்கொள்ள காரணமும் உள்ளனவே.*

இவ்வாறு கண்ணனை அனைத்து உலகமாகவும் காணும் விந்தை இந்த முண்டாசுக் கவிஞன் ஒருவனுக்கே உரித்தாயிற்று. நம்மாழ்வார் சோறு தண்ணீர் வெற்றிலை என்று வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து வடிவிலும் கண்ணனை கண்டார் என்றால் அந்தச் சிந்தனைக்கு வடிவம் கொடுத்தவன் பாரதி. இது அவன் எங்கும் வியாபித்திருக்கும் ஒரு பரம்பொருளாக, நாமாக, நாம் விரும்பும் அனைத்து உறவாக, அதே சமயம் நம்மிடையே நீங்காமல் உறவு கொண்டாடும் அந்தர்யாமியாக விளங்குவதால், அவனை விசிஷ்டாத்வைத தத்துவ விளக்கமாகப் பார்க்கலாம். அதேசமயம் தெய்வ வடிவமாக, பரமனாக துவைத சித்தாந்த வடிவாகவும் நாம் காண்கிறோம்.


கண்ணன் என்னும் சேவகனருளால், 'சிவ யோகம் தெளிவே சிவஞானம் என்னும் ஒளிசேர் .....' என்னும் வரிகளில் சைவவைணவ ஒற்றுமையையும் பார்க்க இயலுகிறது. எல்லாத் தெய்வமும் ஒன்றே, அவை நம்முள் இருக்கும் அஞ்ஞான இருளை விலக்குகின்றன என்பதை நாம் காண்கிறோம். இன்னும் சற்று

*விரிந்து சிறகடித்தால், பரதியின் அக்கினிக் குஞ்சு. மனப்பொந்தில் இருக்கும் மாசையெல்லாம் விலக்கி நம்மை அவன் வயப் படுத்தும் அத்வைத தீபத்தையும் காணலாம். இதுவே மனமென்னும் ஆகாயத்தில் அவனைக் காண உபநிஷதம் காட்டும் வழி.*

*இவ்வாறு, இந்தக் கண்ணன் என்னும் ஒரு பரம் பொருள், சமய வேற்றுமைகளை எல்லாம் கடந்து எல்லா சித்தாந்தங்களையும் இணைத்து ஒரு மாபெரும் தத்துவ சிகரமாக காட்சியளிக்கிறது இதுவே வியாசர் போன்ற ஞானிகளால் அடையப்பட்டது. மிகப் பெரும் தவத்தால், வேத கால ரிஷிகள் சிலர் இந்த ஒளியைப் பார்த்தார்கள். பெரிய பக்தர்களாக பிற்காலத்தில் ஆன திருமங்கையாழ்வார் போன்ற சிலர், ஆதியில் வாடி, வதங்கி, அலைந்து, திரிந்து இறுதியில் இந்த நிலையை அடைந்தார்கள். வேள்விகளின் தலைவன் அவனே; அவனே பரம்பொருள்; எல்லா பிராணிகளுக்கும் ஆதியும் நடுவும் முடிவும் அவனே; உலகின் எல்லா செயல்களின் மிகச்சிறந்த வடிவாக அவன் விபூதி வடிவம் நம்மை ஆட்கொள்கிறது. (அஹம் ஆதிஸ்ச மத்யம் ச பூதானாம் அந்த ஏவ ச பகவத் கீதை 10. 20). இறுதியில் கீதோபதேசத்தின் சாரமான வரிகளைப் பார்க்கிறோம்.*

*எல்லாவித சித்தாந்தங்களையும் நீக்கி என்னை மட்டுமே அடை; நான் உன் கரும வினைகளையெல்லாம் விலக்கி உனக்கு வீட்டுப் பேற்றை அளிக்கிறேன். துக்கத்தை அடையாதே (பகவத் கீதை 18.66)*

*இந்த வரிகளுடன் கீதையின் உபதேச பாகம் முடிவடைகிறது. மிகவும் கருத்தழம் உடைய இந்த ஸ்லோகத்திற்கு சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகியோர் தத்தம் சித்தாந்தங்களுக்கு ஏற்ப விரிவான உரைகளை இயற்றியுள்ளனர். இவ்வாறு கண்ணன் என்னும் ஒரு தெய்வத்தின் வாழ்வை அறிந்தாலே அத்வைத*



விசிஷ்டாத்வைததுவைத தத்துவங்கள் எல்லாம் நமக்குத் தெளிவாகும்.

இதனால் நாம் உணர்வது ஒன்றுதான் இறைவனை அடைய பல மார்க்கங்களை முன்னோர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். இது அவர்கள் நமக்கு கொடுத்து அருளிய மாபெரும் உதவி. இது ஒரு பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர் போல அமைந்திருக்கிறது. நமக்குத் தேவைப்பட்டதை இங்கு வாங்கிக்கொள்ளலாம். ஆனால் அதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும். அது என்ன? மற்ற விஷய சுகங்களில் உள்ள பற்றைத் தியாகம் செய்ய வேண்டும். இது ஒன்றுதான் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது. (உபநிஷதம் த்யாகேன ஏகேன அமிர்தத்வம் ஆநசு:) வாழ்வைத் துறந்து காட்டிற்குச் சென்று இறைவனை நோக்கி தவம் செய்ய வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. கருமத் தியாகம் என்பதன் பொருள் ‘ எல்லா செயல்களையும் விடுவது’ என்பதாகும்.

*ஆனால் கருமபல தியாகம் என்பது ' செயலை விடாது செய்; நல்ல செயல்களையே செய் ஆனால் அதன் பலனில் நாட்டம் கொள்ளாதே' என்னும் உயரிய மனோபாவம். இதுவே பகவத் கீதையின் அடிப்படை சித்தாந்தம். உலகியலில் ஈடுபட்ட மாந்தர் தத்தம் கடமையை நல்ல முறையில் செயல்படுத்தி தம் கடமையை ஆற்றுவது, உலகம் நல்ல முறையில் இயங்க அவசியமாகிறது. ஆனால் மனதை அந்த கருமத்தின் பலனை எதிர்நோக்கிச் செலவிடாமல் இருத்தலும் அவசியம்.இந்த வகையில் மனிதனின் மனதை பக்குவப்படுத்தி அவனை வாழ்வின் ஏணிப்படியில் உயரே வைக்க இந்த பக்திவேதாந்த சிந்தனைகள் வழி வகுக்கின்றன.*

*இந்த நிலையை அடைய, நாம் அவனையே வேண்டி, அவனருள் பெற முயல்கிறோம். வாழ்வின் வேறு எந்தப் பலனையும் விட உயர்ந்த வரம் இதுவே. ரமணரின் வாக்கில் இதைப் பார்க்கலாம்.*

*வேதாந்தத்தே வேறு அற விளங்கும்*
*வேதப் பொருள் அருள் அருணாசலா*

*(அக்ஷர மணிமாலை 99)*

*ஆண்டான்அடிமை என்னும் பேதங்கள் நீங்கும் நிலையே உபநிஷதங்களும் கீதையும் விளக்கும் ஞானம். இந்த வேற்றுமைகள் நமக்குள் உறையும் பரம்பொருளை மறைக்கும் திரை. இதுவே திரோதானம் எனப்படும் மாயா சக்தி. இதை விலக்கி பரமாத்ம சொரூபத்தை அறிதலே மோக்ஷம். வேதம் என்னும் சொல்லே அறிதல் என்னும் மூலத்திலிருந்து பெறப்படுவது. ஆகவே பகவான் சொல்லும் வேதப்பொருள் ஞானவடிவான பரம்பொருளே. நம்முள் இருக்கும் அவனை நமக்குக் காட்டிக் கொடு என்று இறைவனை வேண்டும் பாவத்தில் பக்திஞான சமரசத்தைக் காணலாம்.*

*சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது பகவானின் பேரருள்!*

# எதையும் வீணாக்காதே

## பகவானின் உபதேசம்

அணுவிற்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் விரியும் விகாசமான பகவான் அன்றாட வாழ்க்கையில் மிகக் கருத்துடன் இச்செயலை செய்பவர். இந்த உலகப் பொருள் அனைத்துமே இறைவன் நமக்கருளிய கொடை. தேவையின்றி எவற்றையுமே வீணாக்கலாகாது. நமக்குத் தேவையான அளவுக்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். தேவைக்கு மேல் அணுவளவும் எடுத்துக் கொள்ளுதல் தகாது என்பது அவர் காட்டும் அனுபவ வழி. பகவானின் எளிமை மற்றும் எதையுமே வீணாக்காத மனோபாவம் குறித்து சூரி நாகம்மையார் 12/3/1947 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்:

> சென்ற மாதம் பகவான் ஏகாத்ம பஞ்சகம், பிறந்த நாள் பாக்கள் எழுதினாரல்லவா? அவற்றை மசி ஊறும் துண்டுக் காகிதங்களில் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து, முத்துப் போலிருக்கும் அந்தத் தெய்வ எழுத்து இப்படித் துண்டுக் காகிதங்களில் எழுதப்படுகிறதே என்று வேதனைப்பட்டு, 'ஏதாவது நோட்டுப் புத்தகத்தில் எழுதினால் நன்றாக இருக்குமே'என்றேன். போதும் போதும், புத்தகத்தில் எழுதினால் சுவாமி எழுதினது போலிருக்கிறதேயென்று எவராவது கொண்டு போவார். இங்கு ஒன்றும் தங்காது. சுவாமி எல்லோருக்கும் பொது இல்லையா? என்று சொல்லி, மறுத்து விட்டார் பகவான்.
>
> இன்று காலை பிறந்த நாள் வெண்பாக்களை பகவான் கொஞ்சம் திருத்தியதால், திருத்தப்பட்ட பாட்டுக்களை, எழுதி என் நோட்டில் ஒட்டிக்

கொள்ள நினைத்தேன். எழுதிக் கொள்வதற்காக ஹாலில் துண்டுக் காகிதம் தேடினேன் கிடைக்கவில்லை. வீட்டுக்குப் போய்க் கொண்டு வர எனக்குப் பொறுமையில்லை. எனவே ஆஃபீசில் கேட்டு வாங்கிக் கொள்கிறேனென்று பகவனிடம் தயக்கமோ, தடையோ இல்லாமல் சொல்லிவிட்டு அங்கு போனேன், ஆஃபீசில் உயர்ந்த ரகக் காகிதங்களைக் காட்டினார்கள். எனக்காக அதிலொன்றை எடுத்துக் கொண்டேன். 'பகவான் எழுதுவதற்கு இவை நன்றாகயிருக்குமே' என்றேன். 'அப்படியானால் எடுத்துக் கொண்டு போங்கள்' என்று நான்கு காகிதங்களைக் கொடுத்தார்கள். அவைகளை பகவானிடம் காட்டி, 'ஏதேனும் எழுதினால், இந்தக் காகிதங்களில் எழுதினால் நன்றாகவிருக்கும் இல்லையா? பிறகு புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளலாமே. ஷெல்ஃபில் இதை வைக்கட்டுமா?' என்றேன். எங்கிருந்து அது? ஆஃபீசில் தந்தார்களா? என்றார் பகவான். 'ஆமாம்' என்றேன். சரியாகப் போச்சு! எனக்கெதற்கு இதெல்லாம்? உங்களுக்கு வேண்டியிருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். நான் நியூஸ் பேப்பர்களில் காகிதங்களைக் கிழித்து வைத்துக் கொண்டு எழுதிக் கொள்வேன். இவையெல்லாம் எனக்கெதற்கு? என்றார் பகவான். பதில் சொல்ல முடியாமல், நான் கொண்டு வந்த காகிதங்களை ஷெஃல்பின்மீது வைத்து விட்டேன்.

மணி ஒன்பதாயிற்று. போஸ்ட் வந்து போன பிறகு, படிப்பதற்காக நியூஸ் பேப்பரை எடுத்துக் கொண்டார் பகவான். அதில் நாலு விரல் அகலத்திற்கு அச்சிடப்படாத வெற்றிடம் கண்ணில் தென்பட்டது. அதை மடித்துக் கிழித்துக் கொண்டே என்னைப் பார்த்துப்

*புன்முறுவல் செய்தார். எதற்கென்று நான் புரிந்து கொள்ளவில்லை. பகவான் தான் துல்லியமாகக் கிழித்து நன்றாக மடித்த காகிதங்களை ஷெல்ஃபில் வைத்துக் கொண்டே, இதோ, இந்தக் காகிதங்களை நான் எழுதுவதற்கு உபயோகித்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் எனக்கு எங்கிருந்து வரும்? நானெழுதுவதற்கு இது போதாதா என்ன? என்றார் சிரித்துக் கொண்டே. 'இதெல்லாம் எங்களுக்கு ஒரு பாடந்தான். பகவான் எப்பொழுதும், எல்லா விதங்களிலும் பாடம் கற்பித்துக் கொண்டேயிருக்கிறார்.*

பொருட்கள் மட்டுமன்றி சொற்களிலும் சிக்கனத்தை அறிவுறுத்தியவர் பகவான். உலகிலேயே மிகச் சுருக்கமான உபதேசம் பகவானின் அடிப்படை உபதேசம் ஆகிய நான் யார் என்பதை விசாரித்தறிதல் என்பதாகும்.

**பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.**

என்ற திருக்குறள் வாக்கிற்கு உருவகமே பகவான்தான். ஞானம் பெற ஏராளமான தத்துவ நூல்களைப் பயில வேண்டும் என்பதைக் கூட அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மிகச் சுருக்கமான வெளியே செல்லும் மனத்தை உள்ளே இதயம் நோக்கித் திருப்பி 'நான் யார்' என்பதை அறிக இதுவே ஆத்மசாட்சாத்காரத்திற்கு நேர்வழி என்றார் பகவான்.

தன்னை அறியாது பிற தத்துவங்கள் அத்தனையும் சொன்ன நூறு கோடி தொகை போயின் ஏது பயன்? என்னை அறிவித்து எனை ஆண்ட வேங்கடன்தாள் வண்ண மலர்க்கே வரைந்தூதாய் கோத்தும்பி என்று ரமண சந்நிதிமுறை திருக்கோத்தும்பியில் முருகனார் பகவானின் வழிமுறையை தெளிவுற எடுத்துக் காட்டுகிறார்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்


## மௌனி சாது

## தமிழாக்கம் ராம் மோஹன்

### 15. "மார்தா, மார்தா, நீ எப்போதும் ஜாக்கிரதையாய் உள்ளாய்"

*மார்தா, மார்தா! நீ எப்போதும் எச்சரிக்கை உணர்வுடன் உள்ளாய் பல விஷயங்களைக் குறித்து கவலை உறுகின்றாய். மேரியோ, ஒரு நல்ல பாதையைத் தேர்ந்து எடுத்து உள்ளாள். அதுவே அவளது சிறப்பு (இயேசு நாதர் கூற்று).*

*பகவானது பேரொளி ஊனக் கண்ணால் காண இயலாத ஒன்று. எனினும் அப்பேரொளி மிகச் சக்தி வாய்ந்தது. அதனது தாக்கம் உலகியலில் நம் கருத்துக்களிலும், உலகினை நாம் காணும் பாங்கிலும் இதுகாறும் இல்லா, முற்றிலும் வேறுபட்ட ஒரு மாற்றத்தினை உண்டாக்குகிறது. பகவானுடன் நான் கழித்த சில வாரங்களிலேயே நான் பல்வேறு மக்கள் வெளிப்படுத்தும் வாய் வார்த்தைகளின் பொருளற்ற தன்மையையும், வெறும் கூடு போன்ற வாழ்வியலையும் தெளிவாகக் கண்டு கொண்டேன். உங்னள் வாழ்வின் தலையாய நோக்கம் என்ன என்று நான் பல வேரைக் கேட்டேன். ஏறத்தாழ எல்லா விடைகளுமே ஒரே அச்சில் வார்த்ததுபோன்று ஒன்றாகவே அமைந்து இருந்தன. அவர்கள் அளித்த விடைகளின் சாரம் என்னவென்றால், என்னுடைய வாழ்வின் நோக்கமாவது என் நாட்டிற்கு சேவை செய்வதே; மனித குலத்தை முன்னேறச் செய்வதே; எனது குழந்தைகளின் கலாசாரப் பரிமாணத்தை விரைவு படுத்தலே; என்னுடைய குழந்தைகட்கு உயர்ந்த கல்வியைத் தந்து தார்மிக*



நெறியில் வாழச் செய்வது என்ற இதுபோன்ற பொருளற்ற, உள்ளீடற்ற வார்த்தை ஜாலங்களே ஆகும். அவர்கள் தமது உண்மையான நோக்கம் ஆகிய எனது நோக்கம் சந்தோஷமான வாழ்வதுதான், எனது வாழ்நாள் முடியும்வரை எனது வாழ்க்கையை ஆனந்தமாகக் கழிக்க விரும்புகிறேன் என்பதைக் கூறி இருக்கலாம்.

இப்போது எனக்குப் புரிகிறது. நான் யார்? என்பதை அறியாத ஒருவனால் சரியான எந்த முடிவுக்கும் வர இயலாது. அவனது பௌதிகத் தன்மையைக் கடந்த எந்த ஒரு நிலையைப் பற்றியும் அவனால் புரிந்து கொள்ள இயலாது. ஆத்ம சாட்சாத்காரத்தை அடையும்வரையில், விதி விலக்கு ஏதுமின்றி எல்லோருமே வாழ்க்கையை இயந்திரத் தனமாக நடத்திக் கொண்டு குறுகிறய லட்சியங்களையே சாஸ்வதமானக் கருதிக் கொள்கிறார்கள்.

தன்னுடைய நாட்டிற்காகத் தான் பாடுபடுவதாக எண்ணிக் கொண்டு இருக்கும் ஓர் அரசியல்வாதி, தான் வாழும் இந்த நாட்டின் தொடர்ந்த இருப்பு, உலக நன்மைக்காகத் தேவை ஆனதா என்றோ,

அல்லது சிலகாலங்கழித்து, இந்த உருவமே மறைந்து, அதனிடத்தில் வேறு ஒன்று உதிக்குமோ என்பதைக் குறித்து எண்ணுவதே இல்லை. நாம் வாழும் இந்த கிரகம் சாஸ்வதமான ஒன்றல்ல; பலயுகங்களாக இந்தப் பூமியில் வாழ்ந்து வந்த அறிவு சார்ந்து மனதைத் தலைமுறைகள், காலப்போக்கில் முற்றிலும் மறைந்து மண்ணோடு மண்ணாகி சந்திரன், செய்வாய் போன்ற நமது மண்டலத்தில் உள்ள கிரகங்களைப் போன்று உயிர்ச் சுவடு கூற்று மறையுமோ என்பது குறித்து அவன் சிந்திப்பதில்லை. நான் இங்கே எழுதுவதுபோன்று ஒரு தீர்மானமான முடிவு ஏதும் எழாமல் இருக்கலாம். ஆயினும் சொற்களைத் தாண்டிய எனது உள்ளுணர்ச்சியில் இந்த எண்ணம் எழுகின்றது. இதனை ஒரு ஆன்மிக மௌனத்தின் மூலமே உணர முடியும். இங்கு மனிதன் ஆற்றும் எல்லாச் செயலுமே, அஹங்காரத்திலேயே கருக் கொண்டு உள்ளன. நடிகன் மற்றும் நடிப்பு இரண்டுமே பொய்யானவை; நாம் இம்மண்ணுலகில் வாழும் கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளில் இப் பௌதிக வாழ்க்கையைத் தவிர வேறு மெய்ம்மைகள் ஏதும் இல்லை என்பதை அறிவோம். இந்த உண்மையை நாம் அறிந்து கொண்டால், நமது உலக வாழ்க்கைக்கு அடிப்படையான பொய்மை ஊற்றுக் கண்ணையும் மாயை மயமான நமது வெற்றிகளையும் வெற்றுப் பெருமிதங்களையும் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

தனது பேருண்மையை அறிவதற்காக எவன் தனது சரீரத் தொடர்பான பற்றுகளையும், ஆசைகளையும் தியாகம் செய்கின்றானோ அவன் அவை சுமத்தும் அடிமைத் தளைகளில் இருந்து விடுபடுகிறான். இவை அனைத்தும் பயனற்றவை என அவன் உணர்கிறான். ஆன்மாவாகிய மெய்ப்பொருள் இல்லாமல் பௌதிக உணர்வு என்னும் நிழல் இருக்க முடியாது என்பதை அவன் உணர்கிறான்.

கிறிஸ்துவ சாஸ்திரமாகிய எக்ஸியாஸ்டெஸ் என்னும் நூல் குறிப்பிடுகிறது

வேனிடாஸ் வேனிடாடம் எட் ஓம்நியா வேனிடாஸ்

என்ற லத்தின் மொழி வாக்கியத்தின் பொருள்

தற்பெருமை என்றும் வீண்பொருள

இத் தற்புகழ்ச்சி அனைத்தும் பயனற்றவை

இமிடேஷன் ஆஃப் க்ரைஸ்ட் என்ற சிறப்பு வாய்ந்த நூலின் ஆசிரியர் தாமஸ் செம்பில் இதனைத் தன் நூலில் தெளிவுறக் கூறுகிறார். இந்தத் தற்பெருமையையும் பொய்ம்மையையும் நீக்கும்போது, நாம் எந்த ஆன்மிக நெறியில் பயணித்தாலும் ஒரே ஆத்ம சாட்சாத்காரத்தில் நம்மைக் கொண்டு சேர்க்கின்றன.

ஐந்து ஆண்டுகட்கு முன் பகவானின் உபதேசத்தைக் கண்டபோது, நான் பல்லாண்டுகளாக பயின்று வந்த தாமஸ் செம்பியின் உபதேசங்களுக்கு பெரிதும் ஒத்திருப்பதைக் கண்டு வியந்தேன். இப்பொழுது, அப்பேரொளி, ஸ்ரீ ரமண பகவானின் பௌதிக உருவில் ஜ்வலிக்கின்றது. இதன் பிரகாசம் உலகில் இதுகாறும் தோன்றியுள்ள எல்லா ஞானசிரியரின் உபதேசங்களும் ஒரே உண்மையைக் கூறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது. எப்பொழுதும் உயிருடன் ஒளிரும் இந்தப் பரமார்த்த சத்யத்தை, அந்தோ, பாமர மனிதன், தனது அர்த்தமற்ற கொள்கைகளையும் உயிரற்ற பிடிப்புக்களாலும் ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டான்!

பேரறிவின் ஒளிப் பிழம்பான பகவானின் திருவடிகளில் பணியும்போது, ஒரு சமயத் தத்துவத்தைக் காட்டிலும் இன்னொன்று உயர்ந்தது என்றும் தவறான எண்ணம் முற்றிலும் அழிந்து படுகிறது. பகவான் உபதேசிக்கும் இறுதி உண்மை சமயங்கள் அனைத்தையும் கடந்த ஒன்று தனக்கமையப் பெற்ற சிலரே அதை உணர முடியும்.

# பக்தி தந்த பரிசு

**சரஸா ரங்கநாதன்**

நாயன்மார்களின் பக்தியைக் கண்டு வியப்படையும் நமக்கு, கடவுளாகிய அண்ணாமலையார் பக்தனுக்கு ஈமக் கிரியை, சடங்கு செய்யும் அற்புதக் காட்சியைக் கண்டு, இதுவன்றோ பக்தியின் சிகரம் என வியப்படைகிறோம்.

ஆம், இன்று மாசி மகம் பௌர்ணமி. திருவண்ணாமலையினின்று சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள, பள்ளிகொண்டாபட்டு என்ற கிராமத்தில் இந்த புண்ணிய சடங்கு வைபவம் ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. பச்சைப்பசேல் என்ற நெல்வயல் சூழ்ந்த ஆற்றுப்படுகையில், கரையில், திரு உண்ணாமுலை சமேத திரு அண்ணாமலையார் தீர்த்தவாரி நடத்தும் பொருட்டு அங்கு சென்று தன் பக்தனான வல்லாள மகா ராஜா தம்பதியினருக்கு, திதி கொடுக்கும் கண் கொள்ளாக் காட்சி நடைபெறுகிறது.

ஒவ்வொரு வருடமும் தம் குல வழக்கப்படி ஒரு மகன் தன் பெற்றோருக்கு திதி கொடுப்பது என்பது ஆண்டாண்டு காலமாக நடைபெறும் ஒரு செயல். ஒரு பெற்றோர் ஒரு மகனைப் பெற்று, அன்பும், ஆதாரமும் காட்டி வளர்த்து, அவன் வளர்ச்சியில் உண்மையான அக்கறை செலுத்தி, அவன் முன்னேற்றத்திற்கு தன் வாழ்நாளின் குறிக்கோளாக எண்ணி, அன்பும் பாசமும் பின்னி பிணைய தன்னுடைய வாழ்வினை அர்ப்பணித்து, அதில் பேரின்பம் அடைகின்றனர். அத்தகைய பெற்றோருக்கு மகன் என்ன பிரதி உபகாரம் செய்ய முடியும்? முடியும்& நம் இந்து தர்மத்தின்படி உத்தமமான மகன், பெற்றோரின் இறந்த தினத்தின் அன்று அவர்களை மறவாமல், நினைவு கூர்ந்து, திதி

*கொடுத்து, பெற்றோரை மகிழ்வித்தலே அந்தச் சடங்கு. சாத்திரம், சம்பிரதாயம் என்பது வழிவழியாக நடந்து கொண்டிருப்பது இன்றும் நம் வழக்கத்தில் உள்ள ஒரு செயலன்றோ!*

*திருவண்ணாமலையில் உள்ள திரு உண்ணாமுலை அம்மன் ஸமேத திரு அண்ணாமலையார் பெரிய கோயிலை முதன்முறையாக தரிஸிக்க வந்த அன்பருக்கு கோவிலின் பிரம்மாண்டமான கட்டிடக் கலை வனப்பு உள்ளங்கவர்வது வியப்பே ஆகும். எப்படி இப்படி ஒரு பெரிய, அண்ணாந்து நோக்கும்படியான கோயிலைக் கட்ட முடிந்தது என வியந்து போகிறார்கள்.*

*இப்படித்தான் அன்றும், கோவிலைக் கட்டி முடிந்தபின் கோவிலை நிர்மாணித்த, கட்டிய அன்றைய இராஜா வல்லாள மஹாராஜா பெருமைப்பட்டார். பெருமைப்பட்டதுடன், சிறிது அகங்காரமும் கொண்டு, தன்னைப்போல இப்படி ஒரு பெரிய, பிரம்மாண்டமான கோவிலை வேறு எவர் செய்ய முடியும் என ஆணவம் கொண்டார்.*

*ஞானத் தபோதனரை வா வென்றழைக்கு மலை அன்றோ அண்ணாமலை &.. ஞானியான நம் ரமண பகவான் தன் அக்ஷரமணமாலையில் முதல் பாடலான,*

*அருணாசலமென அகமே நினைப்பவர்*
*அகத்தை வேரறுப்பாய் அருணாசலா*

*என ஒருவரின் அகந்தையை, வேறோடு கிள்ளி எறிபவரன்றோ நம் திரு அண்ணாமலையார்.*

*மிகச் சிறந்த தன் பக்தனான வல்லாள மஹாராஜனின் அகந்தையை, அகற்றுவதற்காக ஒரு நாடகம் நடத்துகிறார். அண்ணாமலையார் ராஜாவின் கனவில் வந்து, ஹே, ராஜா! என்னைப்போல வேறொருவர் இப்படி ஒரு பெரிய கோவில் கட்ட முடியுமா? என ஆணவத்தால் கூறிய உன் எண்ணம், நிறைவேறாது.*

அழகான பெரிய கிழக்கு கோபுரம் வழியாக நான் திருவீதி உலா செல்ல மாட்டேன். அருகிலிருக்கும் சின்ன, திட்டிவாசல் வழியாகவே திருவீதி உலாவிற்கு செல்வேன். கர்வம் நீங்கி வாழ்வாயாக! என கூறி மறைந்தார்.

இன்றும் அது வழக்கத்தில் உள்ளது. கார்த்திகை உற்சவத்தின்போது ஒவ்வொரு நாளும் ஸ்வாமி அந்த சின்ன திட்டி வாசல் வழியாகவே சிரமத்துடன் திருவீதி உலா செல்கிறார்.

கர்வம் முழுவதும் வேறோடு அகன்ற ராஜா, ஆனந்தமாக வாழ்ந்து வரும்போது மகப்பேறு இல்லாமல் தேவியுடன் சேர்ந்து விசனப்பட நேர்ந்தது. பக்தனின் உள்ளம் வேதனைப்பட வாளா இருப்பாரா நம் அண்ணாமலையார். அருள் பாலிக்க ஓடோடி வந்தார். ராஜாவின் அரண்மனை நோக்கி. வயது முதிர்ந்த ஒரு சிவபக்தராக வேடம் பூண்டு யாசகம் வேண்டி, மன்னரிடம் வந்தார். வேறு யாருமே கேட்க அஞ்சும், கூசும்படியான ஒரு யாசகம் வேண்டி நின்ற, சிலனடியார்க்கு மன்னன் கொடுத்தேன் என வாக்கு கொடுத்தார். அப்படி ஒரு வரம்? ஒருநாள் ஒரு பெண்ணை தனக்கு கொடுக்கும்படி கேட்ட சிவனடியார்க்கு, வேறு வழியில்லாமல் தன்னுடைய சிவ பக்தையான மனைவியையே கொடுக்க முன் வந்தார் மன்னன். தனி அறையில் சிவனடியாருடன் பூரண சந்திர பொலிவுடன் அழகிய ஒரு குழந்தையாக மாறிய அதிசயத்தைக் கண்டு பூரிப்படைந்து குழந்தையை வாரி அணைத்து, பால் ஊட்டினாள். என்ன விந்தை இது?

ராஜா வல்லாளன், அவர் மனைவிக்கு திரு அண்ணாமலையார், பக்தியின் பரிசாகத்தானே திருமகனாக அவதரித்தார். விந்தையிலும் விந்தை அன்றோ இது!

கடவுள் அருளால் எல்லா செல்வங்களும் படைத்த வல்லாள மஹாராஜாவின் குழந்தை செல்வம் இல்லாத குறையை அண்ணாமலையார் எப்படி நீக்கினார். அது மட்டுமல்லாமல், வழக்கில் உள்ளபடி ஒரு மகனின் கடமையான பெற்றோருக்கு வருடந்தோறும் நிறைவேற்றும் ஈமக் கடனைத் தவறாமல் செய்யும் கருணையின் வடிவமான திரு அண்ணாமலையாரை எவ்வாறு போற்றுவது?

**பின் குறிப்பு:**

*திருமதி. சரசா ரங்கநாதன் அவர்கள் பள்ளிகொண்டாபட்டு கிராம உற்சவத்தில் உபன்யாஸத்தில் தாம் கேட்ட கதையை எளிமையான தமிழில் தந்துள்ளார். இக் கதைக்கு சமய இலக்கிய ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் நான்கு வெளிப்பிரகார மதில் சுவர்களையும், ராஜகோபுரத்தின் முதல் நிலையையும் கிருஷ்ண தேவராயர் கட்டியதாகவும், பின்னர் மேலே உள்ள பதினோரு நிலைகளை அவரது படைத்தலைவர் சேவப்ப நாயக்கர் கட்டியதாகவும் வரலாற்றுக் குறிப்பு உள்ளது. அண்ணாமலையார் வல்லாள தேவர்க்கு ஈமக் கடன் ஆற்றுவது பற்றியும் வரலாற்றுக் குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2020

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 10 | வெள்ளி | அதிகாலை 2.30 | 11 | சனி | நள்ளிரவு 12.50 |
| பிப்ரவரி | 08 | ஞாயிறு | மாலை 4 மணி | 09 | திங்கள் | நண்பகல் 1 மணி |
| மார்ச் | 09 | திங்கள் | அதிகாலை 3மணி | 10 | செவ்வாய் | நள்ளிரவு 12.00 |
| ஏப்ரல் | 07 | செவ்வாய் | நண்பகல் 12மணி | 08 | புதன் | காலை 8 மணி |
| மே | 06 | வியாழன் | மாலை 7.45 மணி | 07 | வெள்ளி | மாலை 4.15 மணி |

# ஔவைக் குறள்

## ராம் மோஹறன்

### 7. அமுத தாரணை

*61. அண்ணாக்குத் தன்னைஅடைந்து அங்குஅமிர்து உண்ணில்*
*விண்ணோர்க்கு வேந்தனும் ஆம்.*

பொருள்: நாக்கின் அண்ணாம் எனப்படும் மேல்பாகம் ஓங்கார வடிவமாய் கருதப்படுகிறது. இந்த அண்ணாக்கு மத்தியில் சாதகனைத் தனது மனத்தைப் பூர்ண சிரத்தையுடன் பதித்தால், அங்கு சுரக்கும் அமிர்தத்தை உண்ண முடியும். இத்தகைய சாதகன் அமரர்க்கும் அரசன் ஆகமுடியும்.

*62. ஈரெண் கலையில் நிறைந்த அமிர்துஉண்ணில்*
*பூரணம் ஆகும் பொலிந்து.*

பொருள்: யோக தாரணை (நாக்கின் மத்தியில் தன் பூரண கவனத்தைப் பதித்து) செய்யும்போது பதினாறு கலைகளாக வெளிப்படுகின்ற சந்திரனில் உள்ளே பூரணமாகத் ததும்புகின்ற அமுதத்தை உண்ண முடியும். அங்ஙனம் உண்டவனது தேகம் ஒளிநிறைந்து பொலிவுபெற்று விளங்கும்.

*63. ஓங்காரமான கலசத்து அமிர்து உண்ணில்*
*போங்காலம் இல்லை புரிந்து.*

பொருள்: ஓங்கார நாதத்தில் மனத்தை இடைவிடாது பதித்து இருத்தலே ஞானப் பயிற்சி. இங்ஙனம் ஞானயோகம் செய்யும்போது, பிரணவ ஞானம் ஆகிய அமுதம் சாதகன் உள்ளே நிரம்பித் ததும்புகின்றது. இந்தப் பிரணவ ஞான ஒளியில் மூழ்கித் திளைக்கும் சாதகன் மரணம் இல்லாப் பெருவாழ்வு அடைகிறான்.

*64. ஆன கலசத்து அமிர்தை அறிந்துண்ணில்*
*போனகம் வேண்டாமல் போம்.*

*பொருள்: இந்த ஞான யோக சாதனையினால் ஆறு யோக சக்கரங்களையும் கடந்த சஹஸ்ரதளத் தாமரையில் அமிர்தம் போன்ற ஒளி ஜ்வலிக்கும். சாதகன் வேறு எதிலும் மனத்தைச் செல்லவிடாது அதை நோக்கியே தியானித்தால், அந்தப் பிரணவ ஒளி அவனுள்ளே ஒடுங்கிவிடும். அவனது வெளிப் புறத்திலிருந்து எந்த உணவுமே அவனுக்குத் தேவையில்லை. எந்த ஸ்தூல வஸ்துக்களுக்கான தேவையுமே அவனுக்கு இல்லாமல் போய்விடும்.*

*65. ஊறும் அமிர்தத்தை உண்டி உறப்பார்க்கில்*
*கூறும் பிறப்பு அறுக்கலாம்.*

*பொருள்: (எப்படி உடலுக்கான உணவுத் தேவையைக் கடப்பது?) உணவில் விருப்பம் உள்ளவன் உணவு பற்றிய இச்சையிலேயே மூழ்கி உள்ளான். அதுபோல, ஒளி பொருந்திய பிரணவத்தில் மனமும், கண்ணும் பொருந்தும்படி நிலைப்படுத்தினால், அதிலிருந்து சிவஜோதி தோன்றுவதைக் காணலாம். அச்சிவ ஒளியின் தரிசனம் பிறவித்தளையை ஒழிக்கும்.*

*66. ஞான ஒளிவிளக்கால் நல்ல அமிர்துஉண்ணில்*
*ஆன சிவயோகி ஆம்.*

*பொருள்: இந்த சிவஞான ஒளி தரிசனமே இறவாமையைத் தரும் அமிர்தம். அதை உட்கொள்ளும்போது சிவராஜயோகி ஆகலாம். ['வாரிக்கொண்டு விழுங்குவன் என்று ஆர்த்த என்னை, யான் ஒழிய பாரித்து அவன் முற்றப் பருகினான்' என்று இந்த நிலையை நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.]*

*67. மேலை அமிர்தை விளங்காமல் தான் உண்ணில்*
*காலனை வஞ்சிக்க லாம்.*

*பொருள்: ஆறு ஆதாரம் எனப்படும் ஷட்சக்கரங்களையும் தாண்டி உச்சியில் ஒளிரும் துவாதாசாந்தப் பெருவெளியில் இருந்து யோக சாதனை*

மூலம் மரணம் கடந்த பெருவாழ்வை அளிக்கும் ஞான அமுதம் பெற்று உண்ணலாம். இந்த ஞானம் சித்திக்கும்போது, தேக உணர்வு முற்றிலும் நீங்கி விடுகிறது.

நம்மைப் பீடிக்க பாசக் கயிற்றுடன் வரும் யமனையும் ஏமாற்றி நிரந்தர ஞானநிலையில் வாழலாம்.

சத்குருவின் உபதேசத்தைப் பெற்று ஞான ஒளியில் உயரும்போது, தேவியின் அருளால் சஹஸ்ராரத்தில் அமுதம் பெருக்கெடுப்பதை,

ஸத்க்ருத தேவிக ஸரண:
ஸபீஜ நீர் பீஜ யோக சூஸ்ரேண்யா
அபவர்க ஸௌத வல்பீம்
ஆரோத்யம்ப தவ க்ருபயா

என மூக பஞ்ச ஸதியில் மூககவி வழுத்துகிறார்.

ஸத்குரு அருளை மிகக்கொண்டு சீடனின் மனநிலைக்குத் தக்கபடி, ரூபத்தியானம், அரூபத் தியானம், யோகம் ஞானம் என்ற பல ஏணிகளில் ஒன்றில் ஏற்றி விடுகிறார். அப்போது அந்த ஞான மாளிகையின் உச்சியை அடையும்போது அந்த பெருக்கெடுக்கும் ஞான அமுதத்தை உண்ணலாம் என்கிறார் மூககவி.

“காலா! என்னருகே வாடா!
உனை சற்றே காலால் உதைக்கின்றேன் (பாரதியார்)

காவலில் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து
நாவவிட்டு உழிதருகின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே!

(தொண்டரடிப் பொடிஆழ்வார்)

68. காலனல் ஊக்கக் கலந்த அமிர்துண்ணில்
ஞானம் அதுவா நயந்து.

பொருள்: மெய்ப்பொருளாகிய பிரணவத்தை இடைவிடாது தியானிக்கும்போது, தேகத்தில் விளங்கும் பிராணன்கள் அத்தனையும் ஆன்மக் கனலும் ஒன்று கலந்து, பாற்கடலில் கடையப்பெற்று வெளிவந்த அமிர்தம்போல், ஞானஅமுதம் உண்டாகிறது. இந்த ஞானத்தை உட்கொள்ளும்போது நாமே ஞானமயம் ஆகலாம்.

"அறிவு அறியாமையும் அற்ற அறிவே அறிவாகும்"

(உபதேச உந்தியாரில் பகவான் 27)

69. எல்லையில் இன்னமிர்தம் உண்டுஆங்கு
இனிதுஇருக்கில்
தொல்லை முதலொளியே ஆம்.

பொருள்: இங்ஙனம் சஹஸ்ராரத்தில் பொங்கும் ஞான அமுதத்தைப் பிரணவ சாதனை மூலம் அடைந்து அதனை உட்கொண்டால் ஆதி அந்தம் இல்லாத ஆன்மஜோதியில் மூழ்கித் திளைக்கலாம்.

[தொல்லை: தொன்மை, புராதனமான.]

70. நிலாமண் டபத்தில் நிறைந்த அமிர்துஉண்ணில்
உலாவலாம் அந்தரத்தின் மேல்.

பொருள்: துவாதசாந்தப் பெருவெளி தந்திர சாஸ்திரத்தில் சோம மண்டலம் எனப்படுகிறது. யோக சித்தியில் அடையப்பெறும் அமிர்தம் இங்கே நிலைபெறுகிறது. இதனை உட்கொண்டால் சித்தி பல பெற்று வான மண்டலத்தில் உலாவலாம்.

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹறன்

## விளக்கம்: கௌதமன்


*உருவுனார் துண்டை உருண்டதாம் முட்டை*
*குருகுருவிக் குஞ்சின் கதிக்காய் பரிவுடன்*
*ஈரத்துணியில் முட்டையிட்டு ஈன்றவள் போல்காத்து*
*வாரம் முழுக்கஅதை வேவு....(344)*

கொடியில் போட்டிருந்த துண்டினை பகவான் உருவி எடுத்தபோது அங்கே அருகில் இருந்த குருவிமுட்டை விழுந்து விரிசல் உற்றது. அந்தக் குருவிக் கருவுக்காய் பரிந்து பகவான் ஈரத்துணியில் அதைச் சுற்றிவைத்து, பெற்றதாய் போல் பரிவுடன் ஒரு வாரம் முழுக்க அதைப் பராமரித்தார்.

*வேவுக்கு காரணம் வேதனையும், தாய்க்குருவி*
*கோவிக்கும் என்ற கிலியுமாம் சாவிற்கே*
*அஞ்சாத அஞ்சலவர் அஞ்சினார், அஞ்சாம்நாள்*
*குஞ்சான போது குதிப்பு....(345)*

அங்ஙனம் பகவான் 'அடை காத்ததற்கு' என்ன காரணம்? முட்டை விரிசலுற்றதே அது குஞ்சு பொரிக்குமோ என்ற வேதனையா? தாய்க்குருவி கோபித்துக் கொள்ளும் என்ற அச்சமா? இறப்பையே அஞ்சாமல் நேர்கண்ட பகவான் தாயின் துயரத்திற்கு அஞ்சினார். ஐந்தாம் நாளில் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்தபோது, மகிழ்ச்சியில் ஆரவாரித்தார் பகவான்.

*குதித்தன்பர் மாதவனைக் கூப்பிட்டுக் குஞ்சை*
*இதைப்பார் உயிரோ(டு) இருக்கு பதித்தார்பின்*
*அக்குஞ்சை ஆன்ம அருணைசேய் நெஞ்சத்தில்*
*அக்கினிக்குஞ் சான தது....(346)*



மாதவசுவாமியைக் கூப்பிட்டு, “பார், இந்த விரிந்த முட்டையில் இருந்து குஞ்சு உயிரோடு வெளிவந்து விட்டது” என்றார். பின்னர் அக்குஞ்சை தன் நெஞ்சதோடு அணைத்தார். அந்த கோழிக்குஞ்சு ஆத்மாவாம் அக்கினிக் குஞ்சு ஆனதோ!

வேட்டுவப் பையன் வறுமை களைந்தவனால்
காட்டுப் புறாகொண்ட குற்றுயிரை நீட்டுவித்தார்
பச்சை திராட்சை பிழிந்ததன்மேல் பத்திட்டு
இச்செய்கை யாறறிவார் இங்கு....*(347)*

ஒரு வேட்டுவச் சிறுவன் தனது பசியால் தாக்கிய காட்டுப் பறவை மீட்டு, குற்றுயிராய்க் கிடந்த

*அதன் வாயில் பச்சை திராட்சை ரசத்தைப் பிழிந்து உயிரூட்டினார். இத்தகைய உயரிய செயலின் பெருமை யார் அறிவார்?*

***மரமண்டை தொண்டர்கள் மாமரத்தை தாக்கி***
***கரம்கொண்ட கொம்பினால் கொய்ய பரம்பார்த்து***
***"போதும் நிறுத்தும் பழத்துக்கு நன்றியாய்***
***தீதிழைத்தல் பாவம் திருந்து"....(348)***

*சில தொண்டர்கள் மாமரத்தைக் கொம்பினால் அடித்துப் பழம் கொய்ய முற்பட்டபோது, பரமனாம் பகவான், "போதும் நிறுத்துங்கள்! பழம் தந்த மரத்திற்கு நன்றி சொல்லாமல் தாக்குகின்றீர்களே! இது பாவம்! திருந்துங்கள்!" என்றார்.*

***எச்சம்மா நேர்ந்தாளாம் லட்சம் இலைபறித்து***
***அர்ச்சனை சாமிக்(கு) அளிப்பதாய் அச்சச்சோ***
***சொல்லி விளித்தாராம் சாமிக்(கு) உனதுடலை***
***கிள்ளிக் கொடுப்பாயோ கூறு....(349)***

*எச்சம்மா சிவனுக்கு லட்சம் வில்வத் துளிர்களால் அருச்சனை செய்ய வேண்டி, துளிர்களைப் பறித்தபோது, பகவான், "உன் உடல் பாகங்களைக் கிள்ளி அருச்சனை செய்ய முற்பட்டால், உனக்கு எப்படி இருக்கும்? அதுபோல்தானே நீ இலை பறிக்கும்போது இந்த வில்வ மரமும் கஷ்டப்படும்" என்றார்.*

***கூறியது கேட்ட கிழவி முழித்தாளாம்***
***மீறியதைச் சொன்னார் மகரிஷி பாரினில்***
***புல்லிலை காய்கனி பூச்சி புழுவினில்***
***உள்ளவனே உள்ளானுன் னுள்....(350)***

*பகவான் எச்சம்மாளுக்கு அறிவுறுத்தினார்: "உன்னுள்ளே குடிகொண்டுள்ள ஆத்மாவே இந்த வையகத்தில் புல், இலை, காய், கனி, பூச்சி, புழு அனைத்திலும் அந்தர்யாமியாக உள்ளான். எனவே எதையும் துன்புறுத்தாதே!" என்றார்.*

## முக்தி காண்டம்

*திருச்சுழி தோன்றி திருக்கூடல் காய்த்து*
*திருவருணை நின்ற தருவாம் குருச்சுவை*
*ஞானப் பழத்தை நுகர நினைப்பது*
*வானத்தை வில்லாய் வளைப்பு....(351)*

திருச்சுழியில் மதுரை நகரில் கனிந்து அருணாசலத்தில் மலர்ந்து கானப்பழமாய் நிற்கும் பகவானின் பெருமையை நாம் அளவிட நினைப்பது, வானத்தை வில்லாய் வளைக்க முயல்வது போன்றதாகும்.

*அருந்தி, உறங்கி, அளவளாவும் அன்பு*
*நெருங்கி இருப்போர்க்கே ஞானம் பெருந்தீ*
*அருணை ரமணர் அணைப்பில் குளிர*
*அருகதை அன்பே அரன்....(352)*

அவருடன் அமர்ந்து, உணவுண்டு, அவருடன் கூடத்திலேயே உறங்கி அவரது சம்பாஷணையைக் கேட்கும் பாக்யம் பெற்றவர்கள், அருணராமே.

*மேடிட்ட நெற்றியில் மேதமை இட்டவர்*
*தோடுற்ற காதோன் திருவுரு சாடுவிக்கின்*
*“கைகளால் பேசுவார் செய்கையால் சிந்திப்பார்’’*
*பொய்கையாம் வர்ணிப்பைப் பார்....(353)*

பகவானின் சிந்தனைக் கோடுகள் நிறைந்த அவரது நெற்றி அவரது மேதைமைக்கு சான்று பகர்கிறது. அவரே “தோடுடைய செவியன்” ஆகிய சிவபிரானின் மறுஉரு. அவரது உபதேசங்கள் வார்த்தைகளால் மட்டுமல்ல அவரது வாய்பேசாமல் செய்யும் சமிக்ஞைகளாலும், மற்றும் அவர் ஆற்றும் செயல்களாலும் அவர் நடந்து காட்டும் வழியினாலும் தெளிவாக அமைவன. அலையற்ற குளம் போன்ற அவரது வாழ்வே உபதேசமாகும்.

*சாது சிரிப்பிற்கிங்(கு) ஏது உவமானம்*
*பாதுகாப் பேயதன் பாவமாம் வேத*

*மறைபொருளாய் வார்த்தை மனயிருளைப் போக்கும்*
*கரைபுரளும் ஞானக் கடல்....(354)*

அவரது புன்முறுவலுக்கு உவமையே கூறஇயலாத எழில் உண்டு. அவரது அருள்தரும் பாதுகாப்பு அந்த முறுவலில் பாவமாக வெளிப்படுகிறது. அவரது சொற்களே வேதங்களின் பாஷ்யம். அவை நமது அஞ்ஞான இருளை நீக்கும் பேரொளி. அவரே கரைகடந்த ஞானக்கடல்.

*காந்த விழியிரண்டும் காணும் அடியார்க்கே*
*காந்தம் பொழிந்தவரின் காமத்தால் காந்தும்*
*மனக்கருமை நீங்க குணச்சலவை செய்து*
*வினைக்கதவை மூடும் விரல்....(355)*

அவரது சுடர்விடும் விழிகள் அடியாரைக் காந்தம்போல் ஈர்க்கின்றன. அந்தப் பெரும்சக்தி, மீண்டும் மீண்டும் நம்மைப் பண்படுத்தி, மனஇளை நீக்கி, தூயவன் ஆக்குகிறது. நமது கர்மவாயிலை அடைக்கிறது அவரது அருள்கை.

*நரேனை பரமஹம்ஸர் நிர்விகல்பம் தன்னில்*
*சரேலென சேர்த்தாற்போல் சேர்ப்பீர் பிரானென*
*''இந்த வினாவுக்(கு) இளைஞனே நீவிவேகா*
*நந்தனாசொல் என்றார் நகைத்து....(356)*

அன்பர் ஒருவர் பகவானிடம், 'நரேந்திரநாதனை (விவேகானந்தரின் இயற்பெயர்) ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தனது தொடுவதனாலேயே நிர்விகல்ப சமாதியைப் புகட்டியதுபோல நீங்கள் என்னையும் சமாதி நிலையில் சேர்க்கலாமே!" என்றுகேட்க, "கேட்பவர் என்ன விவேகானந்தரோ!" என்று நகைத்தார் பகவான். (தொட்ட உடனே ஸமாதிநிலை உற சாதகனுக்கு உயர்ந்த தகுதி தேவை).

*தொட்டால் துலங்கிட, சுட்டால் பொரிந்திட*
*பட்டால் பலித்திட பக்குவம் கட்டாயம்*

*வேண்டும் அதனோடு யாண்டும் குருவடியைத்*
*தீண்டும் சரணா கதி....(357)*

கைவிரல் பட்ட மாத்திரத்திலேயே ஞானம்பெற, வெறும் சுட்டுதனாலே கர்மங்கள் நீங்க, குருவின் கண்பார்வை பட்ட மாத்திரத்திலேயே ஞானம் எய்த சீடனுக்குச் சரியான பக்குவம் வேண்டும். அதனோடு குருவிடம் முழுச் சரணாகதியும் செய்ய வேண்டும்.

*ஒரா யிரமாசை தேறா மனதுக்குள்*
*பாரா முகமேன் பகவானே சீராக*
*சாதகம் செய்ய சமர்த்தில்லை தேவராஜன்*
*தீதாம் தன்னைத் திருத்து....(358)*

என் மனதில் ஆயிரக்கணக்கான ஆசைகள். என்னால் கடைத்தேற முடியவில்லை. நீ ஏன் என்னிடம் பாராமுகமாய் இருக்கிறாய்? எனக்கோ ஒழுங்கான சாதனை செய்யத் திறனில்லை. என்னைத் திருததுவது உன் பொறுப்பு அல்லவா, இறைவா!

*எல்லாம் எனதென்றே என்னிடம் விட்டுவிட்டு*
*செல்லாத காசாய் சரணடை கொள்ளலிது*
*சக்திக்(கு) உகந்த சகாயமான சாதகம்*
*முக்திக்கு முன்னுதிர்த்த முத்து....(359)*

(என்னால் ஜபம், தவம், தியானம் போன்ற கடினமான சாதனைகள் செய்யத் திறனில்லை). என் சக்திக்கு ஏற்ற எளிதான சாதனைவழி எது என்றபோது, ‘எல்லாமே சத்குருவாகிய என்னுடைய பொறுப்பே’ என்று என்னிடத்தில் அத்தனையையும் ஒப்புவித்து ‘செல்லாத காசு போன்று மதிப்பற்றவன் இந்த சாதகன்’ என உணர்ந்து என்னிடம் பூரணமாக சரணடை என்று பகவான் கூறிய உபதேசம் முக்தி அடைய வழிகாட்டிய முத்துபோன்று வழிகாட்டல்.

# சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்

## வி.நிரஞ்சன்

*பார்த்தனன் புதுமை உயிர் வலி காந்தப் பருவதம்*

*— பகவானின் அருணாசலப் பதிகம்*


*பகவானின் மீது பேரன்பு கொண்டவர்; பகவானின் அருளுக்கும் அன்பிற்கும் அடிமையானவர்; பகவானையே குருவும் அருளும் தெய்வமும் புகலும் என்று சதா பகவானது நினைப்பிலேயே வாழ்ந்தவர். அவர் தான் சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்.*

*1920களில் இருந்து பகவானது மகா நிர்வாணம் வரையும் அதன் பிறகும் தனது வாழ்நாள் முழுதும் பகவானையே தனது கதியாகக் கொண்டு ஒழுகியவர். பகவானது கனிவையும் பரிவையும் பெற்று பகவானது தொண்டராகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். பகவானின் அருளுரைகளையும், வழிகாட்டுதலையும், கருணையையும் குறைவு ஏதும் இன்றி நிறைவாகப் பெற்ற புண்ணியர், பாக்கியசாலி.*

*அவர் மட்டும் இன்றி அவரது மனைவியும் பிள்ளைகளும் பகவானின் மீது பேரன்பு கொண்டவர்களாய் இருந்தனர். பகவானின் பெருமையை வெளிக்கொணரும் பல நிகழ்ச்சிகள் அவரது வாழ்வில் நிகழ்ந்திருக்கின்றன. நாராயண ஐயரின் பார்வையில் அதி உன்னத குருவாகவும் பரம்பொருளாகவும் ஆன்மசொருபமாகவும் பகவான் விளங்குகின்றனர்.*

*இத்தனைக்கும் ஆரம்ப காலத்தில் நாராயண ஐயர் மதக் கோட்பாடுகளை நம்பாதவராகவும், சாஸ்திர சடங்குகளை ஏற்றுக்கொள்ளாதவராகவும், குருத்துவத்தை மறுத்தவராகவும் இருந்து வந்தகாலம்*

அது. 1928-29 களில் நாராயண ஐயர் திருவண்ணாமலைக்கு முப்பது மைல்கள் தள்ளி இருந்த சேத்துப்பட்டில் சப்ரிஜிஸ்திராராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். டாக்டர் ராமகிருஷ்ண ஐயர் என்னும் நல்ல மனிதர் அவருக்கு நண்பராயிருந்தார்.



நாராயண ஐயர்

ராமகிருஷ்ண ஐயரின் அன்னையார் லக்ஷ்மி அம்மாள் திருச்சுழியைச் சேர்ந்தவர். சிறு பிள்ளைகளாக இருந்த பொழுது லக்ஷ்மி அம்மாவும் பகவானும் சேர்ந்து விளையடுவர். பிற்காலத்தில் அவர் பகவானது பக்தையாகவும் விளங்கினார். ஒரு முறை பகவான், பக்தர்களுடன் மலைவலம் வந்துகொண்டிருந்த சமயம், மலர்கள் நிறைந்து பொலிவோடு நின்று கொண்டிருந்த மரத்தில் இருந்து நிறையப் பூக்களைப் பறித்தும் நிம்மதி அடையாது லக்ஷ்மி அம்மாள் தொடர்ந்து பூக்களைப் பறித்துக் கொண்டிருப்பதை, பார்த்தனர். அந்த மரத்தை லக்ஷ்மி நடவும் இல்லை, தண்ணிர் விட்டு வளர்க்கவும் இல்லை.ஆனால் ஒரு பூவைக்கூட விட்டுவிட மனமில்லாமல் அத்தனை பூக்களையும் பறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பகவான், “நீ தான் இதனை நட்டு தண்ணீர் விட்டு வளர்த்தாய் இல்லையா? பூத்துக் குலுங்கிய இதன் அழகை நீ மட்டும் பார்த்தால் போதும் இல்லையா? ஒரு பூவைக்கூட விடாமல் அதனை மொட்டை அடித்துவிடு. வேறு யாரும் அதன் அழகைப் பார்த்து மகிழக்கூடாது இல்லையா?” என்று கடிந்துகொண்டார். அவ்வளவுதான். அதிர்ந்து போனார் லக்ஷ்மி அம்மாள். வேறு ஒரு பரிணாமத்தில் அவர் செய்த தவறை, பகவான் சுட்டிக்காட்டியது அவரது மனதைப் புரட்டிப்போட்டது. அன்றிலிருந்து பூக்கள் நிறைந்து விளங்கும் தாவரங்களைக் காணும் தோறும் பகவானை நினைந்து கொண்டு மானசீகமாக

*அம்மலர்கள் அனைத்தையும் பகவானுக்குக் காணிக்கையாக்கி விடுவார். பகவானது மென்மையான கண்டிப்பு. அதன் விளைவாக லக்ஷ்மியம்மாள் மானசீக சிவபூஜையைக் கற்றுக் கொண்டுவிட்டார். "சீறி / இனாத செயவேண்டாம் எவ்வுயிர்க்கும், பூவும் / அனாதரவாய்க் கிள்ளவேண்டாம் காண், மனாது/ சுயமாகவே உதிர்ந்த தூ மலர்கள் கொண்டே செயக்கடவன் பூசை சிவனுக்கு" என்னும் தேவிகாலோத்திரத்தின் பாடல் வரிகள் நினைவு கூரத்தக்கவை.*

*லக்ஷ்மி அம்மாள் வாழ்நாள் முழுதும் பகவானது பக்தையாக இருந்து வந்தார். அவருடைய மகனார் டாக்டர் ராமகிருஷ்ணனும் பகவானின்மீது பக்தி மிக்கவராய் இருந்தார். நாராயண ஐயரால் உத்தம புருஷர் என்று சிறப்பிக்கப்படுகின்றார் ராமகிருஷ்ண ஐயர். ஒரு முறை திருவண்ணாமலைக்கு கார்த்திகை தீபத் திருவிழா சமயம் செல்லவிருந்த ராமகிருஷ்ண ஐயர் பகவானைத் தரிசிக்க, நாராயண ஐயரையும் அழைத்தார். "எனக்கு ஒருவரை குரு எனக் கொண்டு நம்பி வழிபடுவது எல்லாம் ஒத்துவராது. நீங்கள் அழைப்பதால் வருகின்றேன். ஆனால் உங்கள் குருவின் கால்களில் வீழ்ந்து வணங்குவது என்னால் முடியாது," என்று சொல்லிவிட்டு அவரோடு கிளம்புகின்றார் நாராயண ஐயர்.*

*பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகின்ற நிலையில், இரவில் எங்கும் வசதியாகத் தங்க முடியாத சூழலில், ராமகிருஷ்ண ஐயரும் நாராயண ஐயரும் பகவான் இருக்கும் ஆசிரமத்திற்கு வருகின்றனர். அந்தக் காலத்தில் அன்னையாரின் சமாதி முழு கட்டிடமாக எழுப்பப் பட்டிருக்கவில்லை. சமாதியை ஒட்டி தியானகூடம் இருந்தது. இவர்கள் வந்து கொண்டிருந்த சமயம் பகவான் அன்னையாரின் சமாதியிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்.*

*டாக்டரைப் பார்த்த பகவான், அவர்பால் வந்து டாக்டரது அன்னையாரையும் சகோதரரையும் பற்றி*

விசாரித்தனர். அப்போது நாராயண ஐயர் ஒதுங்கி நின்று கொண்டிருந்தார். பகவானைப் பார்ப்பதற்கோ அவரது கால்களில் வீழ்வதற்கோ அவருக்கு மனமில்லை. அப்பொழுது அவர் ரமகிருஷ்ண ஐயாரால் பகவானுக்கு அறிமுகப் படுத்தப்படுகின்றார். தன்னையும் அறியாமல் பகவானை முதன்முதலாக நோக்குகின்றார் ஐயர். கணத்திலேயே பரவசமாகிவிட்டார். பகவானது வதனத்தின் அழகையும் தெய்வீகத்தையும் கண்ட அக்கணமே தன்னையும் அறியாமல் பகவானின் கால்களில் வீழ்கின்றார்.

தடுத்து ஆட்கொள்ளும் அருள் இயங்க ஆரம்பிக்கின்றது. "இரண்டு நாட்கள் விடுமுறைதானே. தங்கிச் செல்லுங்கள்" என்று அழைக்கின்றது குருவின் அருள். இன்னும் நாராயண ஐயர் முழுமையாய் பகவானுக்கு அடிமை ஆகிவிடவில்லை. பகவான் உண்மையிலேயே ஓர் உயர்ந்த நிலையிலிருகின்றார் என்று புரிந்துகொண்டார். மேலும் பகவானது உபதேசங்களையும் பற்றி அறிந்து கொள்ள முயன்றார். பகவானது "உள்ளது நாற்பது" அவருக்குக் கிடைத்தது.

முதல் பாட்டைப் படித்தவர் திகைத்துப் போனார். "உள்ளது" என்கின்ற பதத்தை மட்டுமே திரும்பத்திரும்ப அமைத்து, நான்கு வரிகளில் வெண்பாவின் சீர்களாக ஆக்கி இருக்கின்றார் பகவான். ஒரே ஒரு பதத்தை இருபொருள் பட திரும்பத்திரும்ப பகவான் கையாண்ட வல்லமையை கோவிலூர் வீரசுப்பைய சுவாமிகள், குஞ்சு சுவாமிகளிடம் பாராட்டிப் பேசி இருக்கின்றார்; அத்துவித மகா வாக்கியங்கள் நான்கு அடிகளுக்குள் செறிந்து கிடப்பது கண்டு வீர சுப்பைய சுவாமிகள் வியந்து பகவானைப் போற்றி மகிழ்ந்தார். நாராயண ஐயரோ பதங்களைச் சரியாகப் பிரிக்க முடியாதவராய் அதனால் அந்தப் பாடலின் பொருளையும் உணர்ந்து கொள்ள முடியாதவராய்த் திகைத்துப் போனார்.

அன்று இரவு பகவான் "உள்ளது நாற்பதை" விளக்கப் போகின்றார் என்று கேள்விப்பட்டு, அதற்காகக் காத்திருக்கின்றார். அந்தக்காலம், ரமணாசிரமத்தில் அடியவர்களுக்கான பொற்காலம். நம் நாட்டவரும் வெளி நாட்டவரும் திரள் திரளாக பகவானை நாடி வருவதற்குச் சற்றே முந்திய காலம். ஆசிரமத்தில் இருந்த அடியவர்கள் சிலரே. அவர்கள் பகவானைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு இரவு நேரத்தில் தெவிட்டாது தித்திக்கும் அவரது அருள் வாசகங்களைச் சதா கேட்டு உள்வாங்கி மகிழ்ந்து கொண்டிருந்த பொற்காலம். பொன்னான வாய்ப்பு, பகவானது "உள்ளது நாற்ப"தை பகவானே படித்து விளக்குவதைக் கேட்டுப் பயன் பெறுவது. வந்த முதல் நாளிலேயே அந்த வாய்ப்பு நாராயண ஐயருக்குக் கிடைத்தது.

அன்று இரவில் ஆவலோடு சுற்றி அமர்ந்துள்ள அடியர்வகளுக்கு பகவான், "உள்ளது நாற்பதி"ன் முதல் பாடலைத் துவங்குகின்றார். ஒவ்வொரு பதமாகப் பிரித்து இனிய குரலில் அவர் பாடலைப் படிக்கும் பொழுதே பொருள் தெளிவாகிக் கொண்டிருப்பதை நாராயண ஐயர் உணர்ந்தார். தான் படிக்கும் பொழுது மிகவும் கடினமாக இருந்த பாடல், பகவானின் பதப் பிரிப்பில் மிகவும் தெளிவாவதை அறிந்து வியந்தார். எளிமைம் இனிமையும் பொருட்செறிவும் தத்துவமும் உள் அடங்கிய பாடல்களை பகவான் ஒவ்வொன்றாகப் படித்து விளக்கிக்கொண்டு வந்தார். பாடல் இருபதினை விளக்குகையில், "ஆன்ம சொருபம் மனதால் அறிய ஒணாதது, இந்திரியங்களுக்குப் புலப்படாதது. ஆதலால் தன்னை அறிவது என்பது தானாய் இருத்தலே," என்று விளக்கினார். அப்போது "பகவான் இதை சுவானுபவத்தினால் தான் சொல்கின்றனரா?" என்று தண்டபாணி சுவாமிகள் கனத்த குரலில் உரக்கக் கேட்டார். "இல்லை எனில் சொல்லத் துணிவனோ?" என்று பகவான் உறுதிபடக் கனிவோடு கூறியதை கேட்ட நாராயண ஐயர் மெய் சிலிர்த்தார். ஆன்ம சொருபத்தை



*பகவானுடன் நாராயண ஐயர் மற்றும் குடும்பத்தினர்*

*உணர்ந்து சொல்லும் பகவான் ஆன்ம சொருபமே என்கிற உட்பொருளைக் கண்டுகொண்டார். தன்முன் இருப்பது ஆன்ம சொருப மெய்ஞான சன்னிதியே எனத் தெளிந்தார். பரவசரானார். அலை அலையாய் எழுந்த ஆனந்தத்தை அடக்க முடியாமல் வெளியே சென்று தன் நிலைக்கு வந்தார். தனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம் என்று கணத்திலேயே புரிந்துகொண்டார். "வந்தேன், கண்டார், வென்றார்" என்று பகவானால் தான் ஆட்கொள்ளப்பட்ட நிகழ்ச்சியை வியந்து பாராட்டி நின்றார்.*

இப்படித்தான் ஒரே நாளில் ஒரே நிகழ்வில் நாராயண ஐயரின் வாழ்நாள் முழுதும் பகவானுக்கு சமர்ப்பணம் ஆயிற்று. மாதந்தோறும் வந்து, பகவானின் சன்னிதியில் அமர்ந்து, பகவானைக் கண்டும் கேட்டும் மனம் மகிழ்ந்தார். மாதங்களைத் தொடர்ந்து வாரந்தோறும் பகவானின் சன்னிதிக்கு வரலானார். பகவானின் கனிவும் பரிவும் கண்டு, தன்னை அறியாமலேயே பகவானின் அடிமையானார். பணி இடங்கள் மாற்றப்பட்டன. ஆனால் ஐயர், பகவானை விடாது தரிசிப்பதில் மிகவும் உறுதியாய் இருந்தார்.

போளூருக்கு அவர் பணி மாற்றப்பட்டது. ஆனால் ஐயர் திருவண்ணாமலையிலேயே குடும்பத்தை வைத்திருந்து தான் மட்டும் தினந்தோறும் போளூருக்குப் புகைவண்டியில் பயணித்து வீடு திரும்பலானார். வரும் வழியிலேயே இரவில் பகவானைத் தரிசித்து விட்டே ஐயர் வீட்டிற்கு வருவார். அப்போது மணி 9 ஆகிவிடும். அதன் பிறகே இரவு உணவு அருந்துவார். இதை அறிந்த பகவான் அவரிடம், "வேலை முடிந்து திரும்புகையில் இங்கே வந்து இருந்துவிட்டு வீடு திரும்புவதால் உங்கள் மனைவி லலிதாவிற்கு எவ்வளவு அசௌகரியம். அன்றாடப் பளுக்களை முடித்துவிட்டு ஓய்வு எடுப்பது தாமதமாகின்றது. உங்களுக்கு உணவு அளித்துவிட்டுத்தான் அவள் பின்னர் உணவு எடுத்துக்கொண்டு உறங்கச் செல்லவேண்டும். இனிமேல் இரவு நேராக வீட்டிற்குச் சென்று உணவு எடுத்துக் கொண்டு பின்னர் இங்கு வாருங்கள்," என்று பணித்தார். ஐயரைப் போன்றே பகவானிடம் பேரன்பு கொண்டு வழிபட்ட ஐயரின் மனைவி லலிதாவின் பால் பகவானின் பரிவு மேலிட்டதை ஐயர் தன் மனைவியிடம் சொல்ல, நன்றியும் களிப்பும் மேலிட்டுப் பூரிப்படைந்தனர் இருவரும்.

தொடரும்

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## பூண்டி ஸ்ரீ ரமணாலயம்

*பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் 1896 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 தேதி மதுரை ஸ்ரீ ரமண மந்திரத்தை விட்டு புறப்பட்டு, செப்டம்பர் 1ஆம் தேதி திருவருணையை நோக்கி பயணம் செய்த விவரங்கள் அனைத்தும் யாவரும் அறிந்ததே. இதன் நூற்றாண்டு விழாவான 1996ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மதுரையிலிருந்து திருவருணையை நோக்கி அருண விஜய யாத்திரை கடந்த 24 ஆண்டுகளாக பகவானின் பரிபூரண கருணையினால் தங்கு தடையின்றி நடைபெற்று வருகின்றது. செப்டம்பர் 2ஆம் தேதி யாத்திரை திருவருணையிலிருந்து மதுரை நோக்கி நிறைவடையும். ஆனால் 2014ஆம் ஆண்டு அனைத்து அன்பர்களும் ஸ்ரீ ரமணாஸ்ரமத்திலிருந்து நேராக தேசூர் ஸ்ரீ ரமண மடாலயத்திற்கும், அடுத்துள்ள மடம் கிராமத்தில் மஸ்தான் ஸ்வாமிகள் சமாதி வளாகத்திற்கும் சென்று தரிசனம் செய்ய முன்னரே முடிவு செய்யப்பட்டிருந்தது.*

*பேருந்து புறப்படும் சமயம் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் வாய்நிறைய குதப்பிய கும்பகோணம் வெற்றிலையுடன், வெள்ளை நிற வேஷ்டி மற்றும் சட்டையும் அணிந்து கொண்டு, நாங்கள் அமர்ந்திருந்த கடைசி இருக்கையை நோக்கி வருவதை கண்ணுற்றோம். அவர்தான் பூண்டி ஸ்ரீ ரமணாலயம் மாரியப்பன் என்று பின்னர் தெரியவந்தது.*

*அந்தப் பயணத்திற்குப் பிறகு அவருடன் எந்தவித தொடர்பு இல்லாமல் போனது. 2015 ஆம் ஆண்டு*

*ஸ்ரீ சாதுஓம் அவர்களைப் பற்றி தகவல்கள் சேகரிக்க தஞ்சையில் யாரைத் தொடர்பு கொள்ளலாம் என்று வினவியபோது, அனைவரும் கூறியது திரு.மாரியப்பன் அவர்களின் பெயரையே. ஏனென்றால் இவர் இருக்கும் பூண்டி கிராமமானது ஸ்ரீ சாதுஓம் அவர்கள் பிறந்த கிராமத்திலிருந்து 7 கி.மீ தொலைவு மட்டுமே. இதனை முன்னிட்டு அவரை சந்திக்க பலமுறை பூண்டி சென்றிருந்தாலும் இம்முறைதான் அவர் எவ்வாறு பகவானிடம் வந்தார் என்பதைப் பற்றியும் அவருடைய ரமணாலயம் உருவானதைப் பற்றியும் பதிவு செய்ய முடிந்தது.*

*நவம்பர் மாதம் 23ஆம் தேதி மதுரையிலிருந்து தஞ்சையை நோக்கி நம் பயணத்தைத் தொடங்கினோம். தஞ்சை புதிய பேருந்து நிலையத்திலிருந்து காரைக்கால் போகும் வழியில் வருகிறது இந்த அழகிய கிராமமான பூண்டி. தஞ்சை பழைய பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 13 கி.மீ. கிராமத்தில் இறங்கி ரமண மஹரிஷி கோவிலுக்கு செல்லும் வழியைக் கேட்டாலே ஊர்காரர்கள் உடன் வந்து காட்டிவிடுகிறார்கள். சுற்றி நிழல் சூழ்ந்த மரங்கள் வடவாற்றங்கரையிலேயே (காவிரியின் கிளை நதி) ஆலயம். பறவைகள் எழுப்பும் கீச்சொலிகள், நாய்களின் வரவேற்பு, குரங்குகளின் குதூகலம் என்று திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தை நினைவுபடுத்த தவறவில்லை இந்த பூண்டி ரமணாலயம். நம்மை வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார் திரு. மாரியப்பன். இனி அவரே நம்மிடம் பேசத் துவங்குவார்:*

எனது பெயர் மாரியப்பன். எனது பூர்வீகமே இந்த பூண்டி கிராமம்தான். சிறு வயது முதல் ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகமாக இருந்தது. பல ஆன்மிக சொற்பொழிவுகள், கோவில் விழாக்களில் கலந்து கொள்வது என்று வாழ்க்கை

நகர்ந்து கொண்டிருந்தது. அப்போது நான் பூண்டி திரு. துளசி வாண்டையாரிடம் உதவியாளராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது எனது பள்ளி தோழர் ஒருவர் எனது பக்கத்து கிராமத்தில் ஒரு சித்தவைத்தியர் இருக்கிறாரென்றும் அவரின் அண்ணன் திருவண்ணாமலையில் சாதுவாக இருக்கிறார் என்றும் அவர் எப்போதாவது இங்கு வந்து செல்வதாக கூறினான். இந்தமுறை அவர் வரும் சமயம் நாம் இருவரும் சென்று தரிசித்து வருவோம் என்று என்னையும் உடன் அழைத்துச் சென்றான். எந்தவித ஈடுபாடில்லாமல் நானும் உடன் சென்றேன். அந்த சாது, திருவண்ணாமலை ஸ்ரீ சாதுஓம் என்று அழைக்கப்பட்டவர் என்று பின்புதான் தெரியவந்தது.

இப்படி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தபோது 1980ஆம் ஆண்டு ஒருநாள் எனது கிராமத்தின் சந்தை பகுதியில் நின்று கொண்டிருந்த சமயம், எனது பள்ளியில் படித்த கபூர் என்ற நண்பன் எதிரே பேருந்து நிறுத்தத்தில் நிற்பதைக் கவனிக்க முடிந்தது. அத்துடன் அவனுடைய கையில் ஏதோ ஒரு பெரியவர் நரைத்த தாடியுடன் இருக்கும் புகைப்படத்தை வைத்திருப்பதையும் காண முடிந்தது. உடனே அவனிடம் சென்று அந்த புகைப்படம் வேண்டும் என்று கேட்டேன். ஆனால் அதற்கு அவனிடம் ஒரு படம் மட்டுமே இருக்கிறதென்றும் தன்னுடைய நண்பர் திரு. ராமலிங்கத்திடம் பல புகைப்படங்கள் இருக்கிறதென்றும் கூறினான்.

உடனே நான் அவரிடம் சென்று அந்த புகைப்படத்தைக் கேட்டேன். அவர் உடனே என் கையில் பகவானின் பெரிய புகைப்படம் ஒன்றை கொடுத்து என்னை வழியனுப்பி வைத்தார். நானும்

அளவிலா மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினேன். அடுத்த நாளே எங்கள் கல்லூரியில் வேலை பார்க்கும் ஆசிரியர் ஒருவர் ஸ்ரீ சாதுஓம் அவர்களின் 'ஸ்ரீ ரமண வழி' புத்தகத்தை, அளித்தார். நான் ஓய்வு நேரங்களில் அந்த புத்தகத்தை மெல்ல மெல்ல புரட்ட ஆரம்பித்தேன். அந்த புத்தகத்திலுள்ள கருத்துக்களால் மிகவும் ஈர்க்கப்பட்டு, ஓரிரு நாட்களிலே சுயநினைவில்லாமல் சுற்றி அலைந்தேன். பகல், இரவு எது என்று சரியாக தெரிவதில்லை. சாப்பாடு தூக்கம் இல்லாமல் இருந்தேன். உடைகள் கழன்று விழுவதைக் கூட என்னால் கவனிக்க முடியவில்லை. எனது இந்த நிலையைப் பார்த்த எனது உறவினர்களும், பணியாளர்களும் எனக்கு புத்தி பேதளித்து விட்டது என்று எண்ணினர். அதன்பின்னர் எனது நண்பர்களின் உதவியில் தான் மீண்டு வர முடிந்தது.

இந்த சம்பவம் முடிந்த ஒருசில ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக திருவண்ணாமலைக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது மட்டுமில்லாது ஸ்ரீ சாதுஓம் அவர்கள் உடனே தங்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த பகவானின் பிக்ஷை என்றே கூறவேண்டும். ரமணாஸ்ரமம் மற்றும் அண்ணாமலையார் கோவிலுக்கு செல்வது, நேரம் கிடைக்கும் போதெல்லாம் கிரிவலம் செல்வது என்று நாட்கள் நகர்ந்து கொண்டு இருந்தன.

அப்போது அந்த கார்த்திகை தீபத்திற்கு எனது தாயாரை அருணைக்கு வரும்படி அழைத்திருந்தேன். அவர்களும் எனது அழைப்பை ஏற்று வந்திருந்தார். சுத்தமாக மழித்திருந்த தலைமுடி கழுத்தில் ருத்ராக்ஷ மாலை, காவி வேஷ்டி என்று எனது கோலத்தை பார்த்த எனது தாயார், அங்கு சாதுக்களுக்கு உணவளித்து வந்த

திருமதி. சுப்புலெட்சுமி அம்மாவிடம் கதறி அழுதார். எனது மகனுக்கு நாங்கள் திருமணம் செய்து வைக்க அழைத்து செல்லலாம் என்று இருந்தோம். ஆனால் இவன் இங்கே இப்படி இருக்கிறான் பாருங்கள் என்று மன்றாடினார். பின்னர் சுப்புலெட்சுமி அம்மா அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கி எனது தாயாருடனே வழியனுப்பி வைத்தார்.

எப்போதெல்லாம் விடுமுறை கிடைக்கின்றதோ அப்போது திருவண்ணாமலைக்கு சென்று வருவதை வழக்கமாக வைத்திருந்தேன். அப்போது ஒரு நாள் பசு லக்ஷ்மி சமாதிக்கு அருகே அமர்ந்திருந்தேன். ஆஸ்ரம பழைய வைத்தியசாலையிலிருந்து 80 வயதுமதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் வருவதை காண முடிந்தது. சற்றுத் தள்ளாடி வருவதை கண்ட நான், அவரை ஓடிச் சென்று பிடிக்கப்போனேன். உடனே அவர், என்னை நீ பிடிக்க வேண்டாம் நான் உன்னை பிடித்துக் கொள்கிறேன் என்று கூறினார். அவரை பகவானின் சன்னதிக்கு அழைத்துச் சென்று மீண்டும் அவரின் அறைக்கு அழைத்துச் சென்றபிறகு தான் தெரிந்தது அவர் குஞ்சு ஸ்வாமிகள் என்று. அதன்பின்னர் எப்போது ஆஸ்ரமம் போனாலும் அவரைச் சென்று தரிசிப்பதை வழக்கமாக கொண்டிருந்தேன்.

நான் மட்டுமல்லாது என்னுடைய கிராமத்தில் இருக்கும் சில ரமண அன்பர்களையும் அந்நாட்களில் ரமணாஸ்ரமத்திற்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தேன். அப்போதுதான் ஒரு யோசனை உதித்தது. நாம் ஏன் நம்முடைய கிராமத்திலேயே அனைத்து அன்பர்களும் ஒன்றிணைந்து ஒரு ரமண சத்சங்கம் துவங்கக்கூடாது என்று. என்னுடைய வீட்டின் அருகே ஒரு வாடகை

வீடு எடுத்து, அங்கேயே பகவான் படத்தை வைத்து, அருணாசல அக்ஷரமணமாலையுடன் கூடிய வாரவழிபாட்டினை துவக்கினோம்.

பின்னர் 2009ஆம் ஆண்டு வடவாற்றங்கரையில் இருக்கும் எங்களுடைய காலி மனையில் சொந்தமாக பகவானுக்கென்று ஒரு ரமணாலயம் கட்ட பூமி பூஜை போடப்பட்டது. சிறிது சிறிதாக கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 06/02/2012 அன்று ஒரு புண்ணிய புனர்பூச நக்ஷத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவிற்கு ஆன்மிக சான்றோர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஒவ்வொரு கார்த்திகை தீபத்திற்கும் அண்ணாமலை சென்று தீபதரிசனம் செய்வதுண்டு. பின்னர் 2012 ஆண்டு முதல் இங்கேயே ரமணாலயத்தில் கார்த்திகைக்கு தீபம் ஏற்றுவதை வழக்கமாகக் கொண்டோம்.

இங்கு அன்பர்கள் தங்குவதற்கு கட்டிட பணிகள் மேற்கொண்டு பாதியிலே நின்றுவிட்டு மீண்டும் அந்த பணிகள் பகவானின் அருளினால் புத்துயிர் பெற்றுள்ளது. ஒரு சிறிய நூலகமும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தைச் சேர்ந்த இனிய நண்பர் திரு.T.V. சந்திரமௌலி அவர்கள் இங்கு பல முறை வந்து பாராயணத்தில் கலந்து கொண்டு சென்றுள்ளார். தமிழகம் மட்டுமில்லாது கேரளத்திலிருந்து பல்வேறு ரமண அன்பர்களும் இங்கு வந்து சென்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் பகவான் ஜயந்தி, ஆராதனை போன்ற விசேஷ நாட்கள் அந்த

வார ஞாயிற்றுகிழமைகளிலே நடைபெறுகிறது. அப்போது தான் பல அன்பர்கள் கலந்து கொள்ளமுடிகிறது என்று கூறிமுடித்தார்.

மிகவும் எளிமையான, ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வரும் பூண்டி மாரியப்பன் அவர்களின் மாதவருமானம் என்பது மிக மிக சொற்பமே.இந்நிலையிலும் இவர் யாரிடமும் சென்று ரமணாலயத்திற்காக பணம் கேட்பதில்லை. தானாக அன்பர்கள் மனமுவந்து அளித்து வருகிறார்கள். மேலும் தஞ்சை ஓவியங்கள் வரைவதில் மிகுந்த திறமை சாலியான இவர் அதன் மூலம் கிடைக்கும் தொகையையும் இவ்வாலய பணிக்கே அர்ப்பணிக்கிறார்.

வெளியூர் ரமண சாதகர்கள் இங்கு வந்து தங்கி பயன்பெறும் வகையில் தங்கும் அறைகளும் கட்டப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், பொள்ளாச்சி போன்ற ரமண மையங்களைச் சேர்ந்த அன்பர்களின் வேண்டுகோளைப் போலவே இந்த பூண்டி ரமணாலயத்திற்கும் ஒரு வேண்டுகோள் வைத்தார் அது ஸ்ரீ முருகனார் ஸ்வாமிகள் அருளிய ஸ்ரீ ரமண சந்நிதிமுறை பாராயணம் இங்கு நடக்க வேண்டுமென்பதே. இவ்வளவு பணிகளை மேற்கொண்ட பகவான் அதை மட்டும் என்ன விட்டுவிடுவாரா.

---

**‘ரமணோதயம்’ – தொடரும் நன்கொடையாளர்கள்**

*திருமதி. ரஞ்சனி ரவி ரமணன் -* U S A *ரூ.3519*



# அருணை ஜோதி

ராம் மோஹறன்

அருணை யெனும்பதி அதிலொ ளிர்ந்திடும்
　　அறிவு ஜோதியாம் ஆசறு வானவன்
அறிஞ ரன்பரும் அடிக ள்தோயவரு
　　அமைதி தந்திடும் ஆதவன் மாதவன்
துரிய மென்னுமோர் தூய வெளியினில்
　　துய்ய வெண்சுடர் கதிரவ னொளியவன்
அறிவைச் செற்றிடும் புலனெ னும்பகை
　　அதனை மாய்த்திடும் ஆண்டகை மனமதில்
அசைவி லாதவோர் அமைதி பூத்திட
　　அலையி லாநிலை ஆழியும் ஆக்குவன்
அருண கிரியினில் கதிரெ ழுந்தென

அன்பு ராச்சிய ஆட்சியன் மாட்சியன்.
தரைக டந்தருள் தரள நித்திலக்
கவியெ ழுந்துஉறு கடலும் ஒத்தவன்
வரையி லன்புடன் அருளும் ஆர்த்திடும்
கண்ம லர்ந்திடும் காட்சியன் நேர்த்தியன்
தகைமை கண்டுபல் தலைவர் பணிவுடன்
தலையைத் தாழ்த்திடும் தானுயர் ஆட்சியன்
தமிழ கத்தினின் தவம் செயிக்கவரு
தருண மாமுகில் தாயவன் மாயவன்
தமிழை தந்தருள் மதுரை யம்பதியில்
மரணம் வென்றிடு பாலகன் பாவலன்
தகுதி தங்கெழில் கவிதை தந்தவோர்
முருக வேதியன் தொழுகழல் தருநிகர்.

அருள் நிழல்தரு அமரர் கோன் புகழ்
கழறு கின்றவோர் கணபதி பணிபவன்
அமுதெனும் தமிழ் கவிவி ளம்பிடு
அருண மாமுகில் ஆரவன் நானெனும்
கலைய றிந்துவர விலையி லாதவொரு
நிலைய டைந்திடும் எனவுரை பகிர்பவன்
மலைம ருந்தென மரண நோய்க்குமோர்
மரண மானநம் தேசிகன் மாசிலன்
கருணை பொங்கிடு கடலு மாகிவரு
மனமி ழந்தநிலை தருபவன் வரமுகில்
அனையை விஞ்சுமோர் அன்பின் ஆழியான்
அவன் திருக்கழல் இணைகளும் பணிகுவோம்.



# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### 140 வது ரமண ஜயந்தி விழா

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் விளங்கும் ஸ்ரீ பகவத் சந்நிதியில் விகாரி வருடம் மார்கழி மாதம் 26 ஆம் தேதி 11/1/2020 சனிக்கிழமை புனர்வசு நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ பகவத் கிருபையால் கொண்டாடப்பெறும்.

ஸ்ரீ பகவானின் ஜயந்தி விழா, ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட, மதுரை ஸ்ரீ ரமண மந்திரம், திருச்சுழி ஸ்ரீ சுந்தர மந்திரம் மற்றும் ரமணாலயம், குரோம்பேட்டையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

## ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம் கோட்டூர் (பொள்ளாச்சி)

*திருவண்ணாமலை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 140 வது ஜெயந்தி விழாவினையொட்டி திருவாசக முற்றோதல் நடைபெற்றது.*

*நிகழ்ச்சியை பொள்ளாச்சி ஸ்ரீ அருணாசல ரமண சத்சங்கம் தலைவர் தமயந்தி ரமண குமார் தலைமை வகித்தனர். திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை பொள்ளாச்சி திருக்கயிலாயம் சிவனடியார்கள் திருக்கூட்டம் அடியார்கள் நடத்தினார்கள். நிகழ்ச்சியில் பொள்ளாச்சி, உடுமலை, கோவை அடியார் பெருமக்கள் பங்கேற்றனர். தீபாராதனைக்குப் பின் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 140 வது ஜெயந்தி விழா 11/1/2020 சனிக்கிழமை.*

*சிவஸ்ரீ டாக்டர். பொ. சந்திரசேகரன் (அன்னை கண் மருத்துவமனை, அருளொளி மன்றம், செயலர் தமிழ்ச்சங்கம், இராமநாதபுரம்) அவர்கள் முன்னிலையில், காலை 10 மணிக்கு அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கி, பேராசிரியர். K. சுப்பராஜ் அவர்கள் சிறப்புரையாற்ற மதியம் 12 மணி அளவில் அன்னதானத்துடன் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. தொடர்பு: திரு. சிரஞ்சீவி, அலைபேசி. 9360047936.*

## ஸ்ரீ ரமண சத்சங்கம், நங்கைநல்லூர்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 140 வது ஜெயந்தி விழா 11/1/2020 சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை சஹஸ்ரநாம அர்ச்சனை மற்றும் அக்ஷரமணமாலை பாராயணத்துடன் நடைபெறும். இடம்:* C-26, AGS Colony, Opp: Modern School, Nanganallur. *தொடர்புக்கு: திரு. கணேஷ், அலைபேசி: 9585506276.*

# ரமண கேந்திரா டிரஸ்ட் - சென்னை

## ஸ்ரீபகவான் 140ஆவது ஜயந்தி நாள்

*சனிக்கிழமை, ஜனவரி 11, 2020*

*இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*நிகழ்ச்சி நிரல்*

*காலை*

| | |
|---|---|
| *6.00 a.m.* | *மங்கள இசை/நாதஸ்வரம்* |
| *7.00 a.m.* | *மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம்* |
| *10.00 a.m.* | *ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை* |
| *10.45 a.m.* | *தமிழ்ப் பாராயணம்: "அக்ஷர மணமாலை"* |
| *12.15 p.m.* | *அன்னதானம், தீபாராதனை* |

*மாலை*

| | |
|---|---|
| *4.00 p.m.* | *வேத பாராயணம்* |
| *5.15 p.m.* | *ஹரிகதா, காலக்ஷேபம், "ரமண மஹாசரிதம்"* |
| | *ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி பாலாஜி (மன்னார்குடி கலைமாமணி ஹரிகதா சாம்பசிவ பாகவதர் அவர்களின் பெயர்த்தி)* |
| *6.45 p.m.* | *மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான் திருவுருவப் படம் வீதியுலா* |

*5/1/2020 முதல் 9/1/2020 வரை ஐந்து நாட்களுக்கு காலை 9.00 முதல் 10.30 வரை நாள்தோறும் பகவான் ரமணருக்கு சிறப்பு லட்சார்ச்சனை நடைபெறும்.*

# ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

## ஸ்ரீபகவான் 140ஆவது ஜயந்தி விழா

**இடம்: 6, ராஜேந்திரபிரசாத் சாலை, நேருநகர், குரோம்பேட்டை**

*சனிக்கிழமை, ஜனவரி 11, 2020*

*முற்பகல்*

| | |
|---|---|
| *8.30* | *வேதபாராயணம்* |
| *9.00* | *ரமண அஷ்டோத்ர பூஜை* |
| *9.30* | *ரமண சந்நிதிமுறை பண்முறைப் பாடல் - திருவாசக செந்நாவலர், திரு. சத்குருநாத ஓதுவார் (மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில்)* |
| *11.00* | *அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் மற்றும் தியானப்பாட்டு பாராயணம்* |
| *11.30* | *ஆரத்தி மற்றும் சிறப்பு விருந்து* |

# ரமண கேந்திரா டிரஸ்ட் - சென்னை

## ரமணரின் வாழ்வும் வாக்கும் - தேசிய கருத்தரங்கு

## ஸ்ரீபகவான் 140ஆவது ஜயந்தி விழாவினையொட்டி

### 19-1-2020 ஞாயிற்றுக்கிழமை

*இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*மாலை*

| | |
|---|---|
| *2.30 p.m.* | வேதபாராயணம் |
| *3.00 p.m.* | வரவேற்புரை - ஸ்ரீமதி. வசந்தா ராகவன் |
| *3.05 p.m.* | பாடல் - திருமதி. அம்பிகா காமேஷ்வர் மற்றும் குழந்தை சஹானா |
| *3.10 p.m.* | "என் பகவான்" - இசைக்கவி ரமணன் |
| *4.00 p.m.* | அறிமுக உரை |
| | டாக்டர் ராம் மோஹன், ஆசிரியர் "ரமணோதயம்" |
| *4.10 p.m.* | தலைமை உரை |
| | டாக்டர் R. நட்ராஜ் I.P.S (Retd) M.L.A., |
| | "ரமண வழியில் நான் யார்" டாக்டர். A.V. ராஜகோபாலன் அவர்களின் நூல் வெளியீடு |
| *4.40 p.m.* | சிறப்புரை |
| | கலைமாமணி கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன், ஆசிரியர், "கலைமகள்" |
| *5.15 p.m* | *Coffee Break* |
| *5.30 p.m.* | "சஹஜம் பழகு" - டாக்டர் பிரணதார்த்திஹரன், ஆசிரியர் "ரமண ஒளி" |
| *6.15 p.m.* | "ரமண பெரு வழி" - ஸ்ரீ கிருஷ்ணா, "தினக்கதிர்" |

# ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

### 6, ராஜேந்திரபிரசாத் சாலை, நேருநகர், குரோம்பேட்டை

## ஸ்ரீபகவான் 140ஆவது ஜயந்தி விழாவினையொட்டி

*ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 5, 2020*

*ஸ்ரீ ரமண சரண பல்லாண்டு முற்றோதல்*

*காலை 8.30 முதல் மாலை 4.30 வரை (மதிய உணவு இடைவேளையுடன்)*

## பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் 140-ஆவது ஜயந்தி விழா நிகழ்ச்சிகள்

இடம் : **தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபம்**
397, வடக்குமாசி வீதி, (கிருஷ்ணன் கோவில் அருகில்), மதுரை–1.

நாள் : **05.01.2020 ஞாயிறு முதல் 09.1.2020 வியாழன் வரை**

நேரம் : மாலை **6.30** மணிமுதல் **8.30** வரை

| நாள் | ரமண இன்னிசை | சொற்பொழிவு |
|---|---|---|
| 05.01.2020 ஞாயிறு | அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் | திரு. V. கிருஷ்ணமூர்த்தி, சென்னை. |
| 06.01.2020 திங்கள் | ரமண நாட்டியாலயா நாகமலை வழங்கும் ரமண நாட்டியம் | திரு. V. கிருஷ்ணமூர்த்தி, சென்னை. |
| 07.01.2020 செவ்வாய் | திரு. அனந்தகிருஷ்ணன் திருமதி. சந்திரா குழுவினர் | Dr. R. ஆனந்தம், இராஜபாளையம். |
| 08.01.2020 புதன் | திருமதி. பிச்சம்மாள் குழுவினர் | Dr. கலாராணி ரெங்கசாமி பேராசிரியை, ஓய்வு, மீனாட்சி மகளிர் கல்லூரி |
| 09.01.2020 வியாழன் | திருமதி. ஜெயாராஜாமணி மாணவியர் திருமதி. ரத்னா, திருமதி.கௌரி | T.N. பிரணதார்த்திஹரன் M.A., Ph.D., Principal, Dayananatha College, Tiruvarur (Rtd.) ரமண ஒளி ஆசிரியர், மதுரை. |

### ஜயந்தி தின விழா

இடம் : **ஸ்ரீ ரமண மந்திரம்**

நாள் : **11.01.2020 சனிக்கிழமை**

நேரம் : காலை **7.30** மணி முதல் **12.30** மணி வரை

**வேத பாராயணம், ஸ்ரீ ரமண ஸஹஸ்ரநாமம், சிறப்பு வழிபாடு**

**நாராயண சேவை (அன்னதானம்)**

## குஜராத்தில் ஸ்ரீ ரமணரின் ஆலயம்

*குஜராத் மாநிலம் ஜாம்நகரில் (சோடிகாசி) பகவான் ரமண மகரிஷிகளின் ஆலயத்திற்கு பகவானது ஆங்கில தின பிறந்தநாளான 30/12/2019 கும்பாபிஷேகத்துடன் திறப்பு விழா நடைபெற்றது. 1500 க்கும் மேற்பட்ட உள்ளூர்வாசிகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னப் பிரசாதம் தாராளமாக வழங்கப்பட்டது. ஸ்ரீரமணாச்ரமம் சார்பாக ஆச்ரமவாசியான திரு. வைத்தியநாதன் அவர்கள் கலந்து கொண்டார்.*

*திரு. திலீப்சிங் ஜடேஜா அவர்களின் வழிகாட்டுதலுடன் குமாரி. பார்த்திபா ஜடேஜா 2015 துவங்கி நான்கு வருட கடின முயற்சியில் இவ்வாலத்தை உருவாக்கியுள்ளார்.*



குமாரி ஜடேஜா மற்றும் அவர்கள் குடும்பத்தினர் ஜாம்நகரை பூர்வீகமாகக் கொண்டு வசித்துவருபவர்கள். ஸ்ரீ ரமணரின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு குமாரி ஜடேஜா அவர்களின் கனவில் பகவான் ரமணர் தோன்றி, தான் ஜாம் நகருக்கு விஜயம் செய்யப்போவதாக கூறினாராம். அதன் தொடர்பாக குமாரி ஜடேஜா அவர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்பெரும் ஆலயத்தை எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்துள்ளனர். இங்கு ஒரு கோசாலையும் அமைந்துள்ளது. இங்கு அருகில் வசிக்கும் அன்பர்களுக்கு இவ்வாலயம் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## V.S.ஸ்ரீநிவாசன்



திரு.V.S. ஸ்ரீநிவாசன் கடந்த 23.12.2019 தனது 96 வது வயதில் பகவான் திருவடியை அடைந்தார். இவர் சுமார் 17 ஆண்டுகள் ரமணாச்ரம அலுவலகத்தில் பணியாற்றியவர். திருச்சி லால்குடியை பூர்வீகமாகக் கொண்ட இவர் இளம் வயதிலேயே தந்தையை இழந்து அவரது அண்ணாவின் உதவியுடன் பள்ளி இறுதிவரை பயின்றார். பின்னர் கல்கத்தா, ஆந்திரா, பெங்களூர் என்று பல்வேறு நகரங்களின் வெவ்வேறு அலுவலகங்களின் பணி செய்தும் மனநிறைவு அடையாத நிலையில் திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்தில் அடைக்கலம் அடைந்தவர். மென்மையான சுபாவம் கொண்ட இவர் பகவானின் உபதேசங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா ட்ரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா ட்ரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



அண்ணாமலை தீப தரிசனம் பகவான் சந்நிதி முன்பாக



அண்ணாமலையாரே ஆண்டுக்கு இருமுறை கிரிவலம் வருவதுண்டு. அதில் ஓர்நாளாகிய தீபத்திற்கு இரண்டாம்நாள் ஆச்ரமம் முன்பாக பக்தர்கள் எதிர்நோக்கியுள்ள காட்சி.

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

